




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 155 17.01.2026 சனிக்கிழமை

Chennai ▸ Volume: 01 ▸ Issue: 155 ▸ Saturday ▸ pages 8 ▸ Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

சனிக்கிழமை
(17-01-2026)
விசுவாவசு ஆண்டு, தை -3
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தசி இரவு 09.45 வரை
பிறகு திரயோதசி
நட்சத்திரம்:
கேட்டை (முழுவதும்)
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி
எமகண்டம்
காலை 1.30 – 3.00 மணி
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 10,30–11.30 மணி
மாலை 4.30 –5.30 மணி

| | |
|---|---|
| மேஷம் | நோய் |
| ரிஷபம் | சாந்தம் |
| மிதுனம் | ஆதரவு |
| கடகம் | பெருமை |
| சிம்மம் | சினம் |
| கன்னி | நிறைவு |
| துலாம் | ஈகை |
| விருச்சிகம் | அன்பு |
| தனுசு | முயற்சி |
| மகரம் | தனம் |
| கும்பம் | இன்பம் |
| மீனம் | உறுதி |

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் சிறந்த மாடுபிடி வீரராக பாலமுருகன் தேர்வு

**மதுரை,ஜன.17:**

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் 22 காளைகளை அடக்கி சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்ட வலையங்குளம் பாலமுருகனுக்கு கார் பரிசும், சிறந்த காளைக்கான டிராக்டர் பரிசை அவனியாபுரம் விருமாண்டி மந்தை முத்துக்கருப்பன் காளைக்கும் அமைச்சர் பி. மூர்த்தி வழங்கினார்.



மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கியது முதல் இறுதி சுற்று வரை விறுவிறுப்பாக நடந்தது. 940 காளைகள் அவிழ்க்கப்பட்டன. 47 காளைகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டன. மாடுபிடி வீரர்கள் 30 பேர் மற்றும் பார்வையாளர்கள், மாட்டு உரிமையாளர்கள் என 50-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இப்போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுக்கான இறுதிச்சுற்று விறுவிறுப்பாக நடந்தது. இதில் சிறந்த மாடுபிடி வீரர்களாக முதலிடம் பெற்ற வளையங்குளம் பாலமுருகன் 22 காளைகளை அடக்கினார். அவருக்கு முதல் பரிசாக ரூ.8 லட்சம் மதிப்புள்ள நிஸான் கார் வழங்கப்பட்டது.

2-வது இடம் பெற்ற அவனியாபுரம் கார்திக் 17 காளைகளை பிடித்தார். அவருக்கு பைக் பரிசாக வழங்கப்பட்டது. இவர் கடந்த முறை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடு பிடி வீரராக இரண்டாவது இடம் பரிசு பெற்றவர்.

சிறந்த காளையாக அவனியாபுரம் விருமாண்டி மந்தை முத்து கருப்பன்காளை முதல் பரிசு வென்றது. இக்காளை 60 வினாடிகள் மைதானத்தில் நின்று விளையாடியது. இந்த காளையின் உரிமையாளருக்கு ரூ.9 லட்சம் மதிப்புள்ள டிராக்டர் பரிசு வழங்கப்பட்டது.ஜி ஆர் கார்த்திக் என்பவரின் காளை 2-வது பரிசு பெற்றது. இந்த காளை 25 வினாடிகள் விளையாடியது.

சிறந்த வீரர், காளை உரிமையாளர் ஆகியோருக்கு அமைச்சர் மூர்த்தி பரிசுகளை வழங்கினார்.

ஆட்சியர் பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன்,மாநகர காவல் ஆணையர் லோகநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# திருவள்ளுவர் தினம்: முதலமைச்சர் அளிக்கும் 4 வாக்குறுதிகள்




**சென்னை,ஜன.17:**

வான்புகழ் வள்ளுவரைப் போற்றும் இந்தத் திருவள்ளுவர் நாள்-இல், தமிழ்நாட்டு மக்களுக்கு நான் நான்கு முக்கிய வாக்குறுதிகளை அளிக்கிறேன்! என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில்,

அஞ்சாமை மனிதநேயம் அறிவாற்றல் ஊக்கமளித்தல் - வள்ளுவன் சொன்ன இவை நான்கும் நமது ஆட்சியின் அடிநாதம்!

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு

\- திருவள்ளுவர்

சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராகப் போராடும் துணிச்சல்.வறியோர் எளியோர் வாழ்வுயர மனிதநேயத் திட்டங்கள்.

இளைய சமூகத்தின் அறிவாற்றலை வளர்க்கும் முன்னெடுப்புகள்.

தொழில் வளர்ச்சிக்கும், மகளிர் மேம்பாட்டிற்கும் ஊக்கமளிக்கும் ஆக்கப் பணிகள்.இவை நான்கும் தமிழ்நாட்டில் தொடரும் என்பது இந்த திருவள்ளுவர் தினத்தில் உங்களுக்கு நான் தரும் வாக்குறுதி! என்று கூறியுள்ளார்.

# ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்த வெள்ளை மாளிகை

**வாஷிங்டன்,ஜன.17:**

ஈரானில் தற்போதைய ஆட்சிக்கு எதிராக நடந்து வரும் போராட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது.

ஈரானில் நடந்து வரும் போராட்டங்களை அமெரிக்கா தூண்டிவிடுவதாக ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என வெளியான தகவலுக்கு அதிபர் டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

இந்நிலையில், ஈரானில் கொலைகள் தொடர்ந்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என அந்நாட்டு அரசுக்கு வெள்ளை மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாகவெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின்




லீவிட் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நேற்று நிறைவேற்ற திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட இருந்த 800 மரண தண்டனைகள் நிறுத்தப்பட்டதை அதிபர் டிரம்ப் புரிந்து கொள்கிறார்.

அதிபருக்கு அனைத்து விருப்பங்களும் மேசையில் உள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கொல்வது தொடர்ந்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என அதிபர் டிரம்ப் ஈரானை எச்சரித்திருந்தார்.

அதிபர் டொனால்டு டிரம்ப் ஈரானில் நிலவும் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறார் என தெரிவித்துள்ளார்.

## 77வது குடியரசு தின விழா

# தலைமை விருந்தினர்களாக பங்கேற்கும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள்

**புதுடெல்லி,ஜன.17:**

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் இந்த ஆண்டு நடைபெறும் குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்கின்றனர்.

குடியரசு தின விழாவுக்காக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் அழைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த இரண்டு ஐரோப்பிய கவுன்சில் தலைவர்கள் ஜனவரி 25 முதல் ஜனவரி 27 வரை இந்தியாவுக்கு அரசு முறை பயணமாக வருகின்றனர். மேலும், அவர்கள் ஜனவரி 27 அன்று நடைபெறும் 16வது இந்திய-ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டிற்கும் இணைத் தலைமை தாங்குவார்கள்.

இந்த வருகையின் போது, ஐரோப்பிய ஆணையத் தலைவர் லேயன் மற்றும் ஐரோப்பிய



ஒன்றியத் தலைவர் கோஸ்டா ஆகியோர் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்திப்பார்கள் என்றும், பிரதமர் நரேந்திர மோடியுடன் தனிப்பட்ட மற்றும் தூதுக்குழு அளவிலான பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள் என்றும் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்படும் இந்திய-ஐரோப்பிய கவுன்சில் வர்த்தக மன்றத்திலும் அவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் 2004 முதல் இணைந்து பணியாற்றி வருகின்றன. மேலும் இரு இந்தியா - ஐரோப்பிய யூனியனின் வர்த்தக ஒப்பந்தமும் இறுதி கட்டத்தில் உள்ளன. இந்திய வர்த்தகச் செயலாளர் ராஜேஷ் அகர்வால், தலைவர்களின் உச்சிமாநாட்டிற்கு முன்பே இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு இரு தரப்பினரும் மிக அருகில் இருப்பார்கள் என்று கூறியுள்ளார்.

# ஈரானில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க மத்திய அரசு தீவிரம்

**புதுடெல்லி,ஜன.17:**

ஈரானில் தற்போதைய ஆட்சிக்கு எதிராக நடந்து வரும் போராட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இதற்கிடையே, இந்தியக் குடிமக்கள் மறு உத்தரவு வரும் வரை ஈரானுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், ஈரானில் உள்ள இந்தியர்கள் அங்கு கிடைக்கும் எந்தவொரு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தி உடனே நாட்டை விட்டு வெளியேறும்படி டெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியது.

ஈரானில் உள்ள இந்தியர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் கையாளும்படி வெளியுறவு துறை மந்திரி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருக்குப் பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

முதல் கட்டமாக அங்குள்ள இந்தியர்கள் விமானங்கள் மூலம் வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நிலைமை மேலும் மோசமடைந்தால், அவர்களை மீட்க இந்திய விமானப்படை மற்றும் இந்தியக் கடற்படை கப்பல்கள் மற்றும் விமானங்கள் பயன்படுத்தப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவுத் துறை மந்திரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார்.

# காரைக்கால் மீனவர்கள் சிறைபிடிப்பு

**புதுச்சேரி,ஜன.17:**

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் பகுதியை சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களின் படகுகளையும்ட ராமேஸ்வரம் மீனவர்கள் சிறைபிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கை கடல் பகுதிகளில் காரைக்கால் மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடிப்பதால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது.இதனை தொடர்ந்து, இலங்கை கடல் பகுதிகளில் மீன் பிடித்த காரைக்கால் மீனவர்களை ராமேஸ்வரம் மீனவர்கள் சிறைபிடித்துள்ளனர்.



# மீண்டும் ஒரு கச்சா எண்ணெய் கப்பலை பறிமுதல் செய்தது அமெரிக்கா

**வாஷிங்டன்,ஜன.17:**

வெனிசுலா உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டி வருகிறார்.

இதையடுத்து, வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ போதைப்பொருள் கடத்தலுக்கு ஆதரவு அளிப்பதாகக்கூறி அந்நாட்டின் மீது அமெரிக்கா கடந்த சில நாட்களுக்குமுன் தாக்குதல் நடத்தியது. அந்நாட்டு



அதிபர் மதுரோவை அமெரிக்கா கைது செய்தது. இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

வெனிசுலாவில் இருந்து பிற நாடுகளுக்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் கப்பல்களையும் அமெரிக்கா பறிமுதல் செய்து வருகிறது.

இந்நிலையில், வெனிசுலாவுடன் தொடர்புடைய மேலும் ஒரு கச்சா எண்ணெய் கப்பலை அமெரிக்கா பறிமுதல் செய்தது.

கரீபியன் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த கச்சா எண்ணெய் கப்பலை அமெரிக்க படைகள் பறிமுதல் செய்தது. இந்த கச்சா எண்ணெய் கப்பல் வெனிசுலாவில் செயல்பட்டு வரும் கச்சா எண்ணெய் நிறுவனங்களுடன் தொடர்புடையது என தெரிய வந்தது.

## ஸ்ரீரங்கம் நம்பெருமாள் கனு திருநாள்



அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் ஸ்ரீரங்கம் நம்பெருமாள் கனு திருநாள் முத்துகுறியில் முத்து பாண்டியன் கொண்டை, முத்து மாலை, முத்து அபயஹஸ்த்தம், முத்து குடை, திண்டுடன் புறப்பாடு

## நம் அழகிய மணவாளன்!!



திருக்கூடல் அருள்மிகு ஸ்ரீகூடலழகர் பெருமாள் திருக்கோவில்- மகர சங்கராந்தி திருநாள் முன்னிட்டு இராஜாங்க சேவையில் ஸ்ரீ வியூக சுந்தரராஜப் பெருமாள்.

## மானாமதுரை ஸ்ரீமஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர்

### ஸ்ரீல ஸ்ரீஞான சேகர ஸ்வாமிகள் குருபூஜை விழா







**சிவகங்கை, ஜன. 17:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியேரேந்தல் விலக்கு பகுதியில் பஞ்சபூதேஸ்வரம் உள்ளது. தமிழகத்தில் பிரசித்தி பெற்ற மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில் உள்ளது. இதன் நிறுவனர் ஸ்ரீல ஸ்ரீ ஞான சேகர ஸ்வாமிகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜீவசமாதி அடைந்தார். கோவில் வாளாகத்தில் சுவாமி ஜி அதிஷ்டானம் உள்ளது. இங்கு தினந்தோறும் பூஜைகள் நடைபெற்று வருகிறது. சுவாமி ஜி யின் முதல் ஆண்டு குருபூஜை நடைபெற்றது.

காலையில் விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கி காலை 9 மணிக்கு திருவாசக சித்தர் கயிலை புனிதர் சிவ. தாமோதரன் ஐயாவின் திருவாசக விண்ணப்பப் பெருவிழா விழாவில் 30 பதிகங்கள் பாடப்பட்டது.பகல் 12 மணி அளவில் குருபூஜை, மகேஸ்வர பூஜை அன்னதானம் நடைபெற்றது . இதில் ஏராளமான சிவனடியார்கள் சுவாமி ஜி யின் பக்தர்கள் கலந்து கொண்டனர்.இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீமாதாஜி தலைமையில் ஸ்ரீமஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட் மற்றும் பக்தர்கள் செய்து இருந்தனர்.

## தமிழகத்தில் குமரி முதல் சென்னை வரை குறள் வழிச்சாலை அமைக்க தமிழர் ஆய்வு மையம் கோரிக்கை




**மதுரை, ஜன. 17 :** சென்னை வரையிலான தேசிய நெடுஞ்சாலைக்கு குறள்வழிச் சாலை எனப் பெயரிடுவது தொடர்பான முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவோம் என இயக்குநர் அமீர் மதுரை மாட்டுத்தாயானிப் பொங்கல் விழாவில் தெரிவித்தார் அதற்கான முயற்சியில் தனது பங்களிப்பும் இனி தீவிரமாக இருக்கும் அவர் உறுதியளித்தார்.

மதுரை மாட்டுத்தாவணி பஸ்நிலையத்தில் தமிழர் ஆய்வு மையம் சார்பில் 27 ஆண் நடைபெற்று வரும் பொங்கள் திருநாளை முன்னிட்டு இந்தாண்டு முப்பெரும் விழாவாகக் கொண்டாடியது தமிழர் ஆய்வுமையம். பாரம்பரிய முறைப்படி மண்பானையில் பொங்கல் வைத்து விழாவில் கலந்து கொள்வர்களுக்கும் பேருந்து நிலைய பயணிகளுக்கும், சிறுவியாபாரி மற்றும் உழைக்கும் தொழிலாளர்களுக்கும் பொங்கல் வழங்கி கொண்டாடப்பட்டது.

மதுரை மாநகராட்சி பொறுப்பு மேயர் டி நாகராஜன். விழாவில் சமூகத்துக்கு சிறந்த பணியாற்றிவரும் பெரியவர்களுக்கு தமிழ்ஒளி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அந்தவகையில் அகர்வால் கண் மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் தி. பத்ரி நாராயனன், மதுரை பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் பேராசிரியர் அழகப்பன். மதுவிலக்குப் போராளி சுருத்தம்மா, அருள்திரு பாவ்யைக் சமூகச் செயல்பாட்டாளர் கிரா, வழக்கறிஞர்கள் அயாஸ் தாமோதரன், மனிதம் முருகன் கெமா ஆனந்த் கோமதி ஆகியோருக்கு பொன்னாடை அனிவித்து நூல் வழல் விருதுகளை வழங்கினர் மதுரை மேயர் (பொ) நாகராஜன், திரைப்பட இயக்குநர் அமீர், தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரல் அஸ்மல்கான் ஆகியோர்.

விழாவில் மூத்த பத்திரிகை யாளர் திருமணபின் "சமூகத்தின் முகம் நூலினை தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெ அஸ்மலகான் வெளியிட திரைப்பட இயககுநர் அமீர் பெற்றுக்கொண்டார். இது அவரது 65ஆவது நூலாகும்.

குமரி முதல் சென்னை வரையிலான தேசிய நெடுஞ்சாலைக்கு குறள்வழிச் அமைக்கவேண்டும் என்ற கருத்தினை அடுத்தடுத்த கட்ட முயற்சிகளை மேற்கொளாத் தயாராக இருப்பதாக அமீர் தெரிவித்தார்.

சமத்துவத்தை அடுத்த தலைமுறைக்கும் கடத்துவது நமது நமது பணியாக இருக்கவேண்டும் என்ற தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரல் அய்மய்கான் விழாவில் எழக்கறிஞர் ஹென்றிடிபேன், அருள்திரு முனைவர் அருள்ராஜ் உள்ளிட்ட மாமனிதப் பள்ளி குழந்தைகள், பேருந்து நிலைய ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள், நடத்துநர்கள். சிறுவியாபாரிகள் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த விழாவுக்கு ஆய்வு மையத்தின் தலைவர் வழக்கறிஞர் இராசன் தலைமை வகித்தார். வழக்கறிஞர்கள் தமிழ்முனி எட்வின் சிஎம் ஆறுமுகம் இராபசந்திரகுமார் கருணாநிதி, சிவகங்கைதாய்இல்லம் புஷ்பராஜ், இயற்கையம்மா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழகம் முழுவதுமிருந்து திரளான சான்றோர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். திண்டுக்கல் சகநிசாமக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## பாலமேடு ஜல்லிக்கட்டு உதயநிதிக்காக நடத்தப்பட்டதா?

### ஆர்.பி.உதயகுமார் கேள்வி





**மதுரை, ஜன.17:** மதுரையில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நிருபர்களிடம் கூறியதாவது:-

மனிதனின் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் கடவுளுக்கும், இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் பொங்கல் வைத்து வழிபடுகிறோம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதை போல எடப்பாடி பழனிசாமி சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று நிச்சயம் கோட்டைக்கு போவார் அப்போது தமிழக மக்களுக்கு நிச்சயமாக வழி பிறக்கும்.

உலகப் பிரசித்தி பெற்ற அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய ஜல்லிக்கட்டு போட்டி மன்னராட்சி முதல் தற்போது மக்களாட்சி வரை மக்கள் ஜல்லிக்கட்டாக நடைபெற்று வருகிறது. ஆனால் தற்போது உதயநிதிக்காக ஜல்லிக்கட்டா? மு.க.ஸ்டாலினுக்காக ஜல்லிக்கட்டா? என்ற கேள்வி எழுந்துள்ளது.பாலமேடு ஜல்லிக்கட்டில் அதிகாலையில் இருந்து மாடுபிடி வீரர்களும், காளைகளும் அனைவரும் பல மணி நேரம் காத்திருந்து தொடங்கப்படவில்லை. பாலமேடு ஜல்லிக்கட்டு மரபுபடி 7 மணி முதல் 8 மணிக்குள் தொடங்கப்பட வேண்டும். ஆனால் 9.30 மணி தாண்டியும் வாடிவாசல் திறக்கப்படவில்லை என்பது மக்களுக்கு வேதனையாக இருந்தது.

உதயநிதிக்காக வேடிக்கை ஜல்லிக்கட்டு போட்டியை நடத்துகிறார்கள். தி.மு.க. அரசின் அதிகார துஷ்பிரயோகம் எல்லை மீறி சென்று விட்டது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஜனநாயகம் மலர இந்த தைத்திருநாளில் நாம் சூளுரை ஏற்க வேண்டும் என்று கூறினார்.

## பா.ஜ.க. ஆட்சி : ஆடிட்டர் குருமூர்த்தி சொல்லும் கணக்கு



**சென்னை, ஜன.18:** பா.ஜ.க. மாநில தலைவராக இருந்த அண்ணாமலையை மாற்றியது தொடர்பாக யூகங்கள் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக அண்ணாமலை மற்றும் பா.ஜ.க. மேலிடம் விளக்கம் அளிக்காமல் உள்ளனர். இந்த நிலையில், அண்ணாமலை மாற்றப்பட்டு அரசியல் யுக்தி என்று ஆடிட்டர் குருமூர்த்தி பேசியுள்ளார்.

'துக்ளக்' நாளிதழின் 56-வது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. இதில் பங்கேற்று ஆடிட்டர் குருமூர்த்தி பேசியதாவது:-

அண்ணாமலை பொறுத்த வரை அது பா.ஜ.க.வின் முடிவு. அண்ணாமலையும், பா.ஜ.க.வும் சேர்ந்து தான் முடிவு எடுத்துள்ளார்களே தவிர அண்ணாமலையை கலக்காமல் எதையும் எடுக்கலை. காரணம் என்னவென்றால் பா.ஜ.க.வால் மட்டும் தனியாக தமிழ்நாட்டில் வெல்ல முடியாது என்கிற நிலைமை இருப்பதினால்.

எடப்பாடி எந்த விஷயத்திலும் பா.ஜ.க.வோடு நெருங்ககூடாது என்று 2024-ல் அவர் எடுத்த முடிவை அவர் மாற்றிக்கொண்டு பா.ஜ.க. ஒத்துழைக்க வந்திருப்பதானால் தான் இன்னிக்கு தி.மு.க.வை வீழ்த்த முடியும் என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டு இருக்கிறது.

இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அரசியலில் எதார்த்தம் என்று ஒன்று இருக்கிறது. எல்லாமே ஐடிலிசம் கிடையாது. பா.ஜ.க. தனியாக நின்று 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எழுச்சி பெற்று வெற்றி பெறும் என்றால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா? 10 ஆண்டு தி.மு.க. இருக்கும் என்றால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா? ஏற்றுக்கொள்ள முடியாது.

தி.மு.க. போயே ஆக வேண்டும் என்றால் அதற்கு உண்டான யுக்திகளை தயார்படுத்த வேண்டும். அமித்ஷாவை விட இதைப்பற்றி விஷயம் தெரிந்தவர்கள் யாரும் இருக்க முடியாது. 2014-ல் மகாராஷ்டிரா தேர்தலின் போது உத்தவ் தாக்கரே என்கிட்ட போன் செய்து கேட்கிறார்.

அமித்ஷா எங்க இருக்காரு சார் என்னால பார்க்கவே முடியலை சார் என்று. அப்போ மாட்டுங்காவில் ஒரு சின்ன வீட்டில் இருந்தார் அந்த சமயத்தில். அங்கிருந்து தான் யுக்திகளை கையாண்டு பா.ஜ.க. நம்பர் 2 கட்சியாகவும், சிவசேனா நம்பர் 1 கட்சியாகவும் இருந்தது. அதனை அப்படியே மாத்தினார் அமித்ஷா.

இன்றைக்கு பா.ஜ.க. மகாராஷ்டிராவை கைப்பற்றி இருக்கிறது என்றால் அன்னிக்கு அவர் எடுத்த யுக்தி. அதனால் அவருக்கு தெரியும். சில பேருக்கு அந்த அஸ்ட்ராலானி என்று கூறுவார்கள். அதாவது எல்லாவிதமான திறமையும் இருக்கும். அந்த மாதிரி திறமை உள்ளவர். தமிழ்நாட்டை கையில் எடுத்து இருக்கார்.

நம்பிக்கையுடன் இருங்கள். அண்ணாமலையும் அவருக்கு ஒத்துழைப்பார். அண்ணாமலை என்னுடைய ஃப்ரண்ட். அவர்கிட்டயும் நான் பேசிக்கொண்டு தான் இருக்கேன். அதனால அண்ணாமலைக்கு எதிராக ஏதோ ஒரு முடிவு எடுக்கப்பட்டதாக நினைத்துக்கொண்டு பேசுவது தவறு என்று கூறினார்.

## ஹம்ச வாகனம் நிகழ்வு



திருவள்ளூரில் வீர ராகவ பெருமாள் கோவிலில் நேற்று காலை ஹம்ச வாகனம் நிகழ்வு நடந்தது.

## அனைத்து இந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சேலம் மாவட்ட கிளையின் சார்பாக திருவள்ளுவர் சிலைக்கு மாலை




**சேலம், ஜன.17:** தைப்பொங்கல் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, அனைத்து இந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சேலம் மாவட்ட கிளையின் சார்பாக- எழுத்தாளர் மற்றும் மாவட்டத் தலைவர் வெ. தமிழழகன் தலைமையில், செயலாளர் முனைவர்வே. பெரியசாமி முன்னிலையில் சேலம் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள் சுபாகர், மனோரஞ்சிதம் பாபு, ப. ம. ஆறுமுகம், பூமி பாலகன், கவிஞர் செல்வராஜா, வின்சென்ட் செண்பகராஜ், சிவப்பிரியன், சசிகுமார், பசுமை பழனிச்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவில்-தாம்பரம் இடையே 18-ந்தேதி சிறப்பு ரெயில்: இன்று முன்பதிவு செய்யலாம்



**சென்னை, ஜன.17:** பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊர் சென்றவர்கள் நாளை 18-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் சென்னை உள்பட பல்வேறு நகரங்களுக்கு திரும்புகிறார்கள். காலையில் இருந்து பஸ் மற்றும் ரெயில்களில் பயணத்தை தொடர முன்பதிவு செய்துள்ளனர்.

நாளை 19-ந்தேதி (திங்கட்கிழமை) பள்ளி, கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் திறக்கப்படுவ தால் வெளியூர் சென்றவர்கள் சென்னை திரும்புவதற்கு தயாராகி வருகின்றனர். இதனால் தென் மாவட்டங்களில் இருந்து அதிகளவில் பஸ் மற்றும் ரெயில்கள் இயக்கப்படுகிறது. கூடுதலாக சிறப்பு ரெயில்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நாகர் கோவிலில் இருந்து தாம்பரத்திற்கு சிறப்பு ரெயில் விடப்பட்டுள்ளது. நாளை 18-ந்தேதி மாலை 5 மணிக்கு இந்த சிறப்பு ரெயில் (எண்.06160 ) புறப்பட்டு மறுநாள் (திங்கள்கிழமை) அதிகாலை 4.10 மணிக்கு தாம்பரம் வந்தடைகிறது.

இந்த அதிவேக சிறப்பு ரெயில் வள்ளியூர், நாங்குநேரி, திருநெல்வேலி, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி, விருத்தாசலம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக இயக்கப்படுகிறது. இந்த ரெயிலுக்கான முன்பதிவு இன்று (சனிக்கிழமை) தொடங்குகிறது.

## ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதில் தவறில்லை

### சென்னையில் சச்சின் பைலட் பேட்டி



**சென்னை, ஜன.17:** காங்கிரஸ் கட்சித் தலைவரும், ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவருமான சச்சின் பைலட் நேற்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவருக்கு காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது சச்சின் பைலட் கூறுகையில் "ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவத்தை விரும்புகிறது. காங்கிரஸ் தொண்டர்கள் ஆட்சியில பங்கு கேட்பதில் தவறு ஏதும் இல்லை. இதன்மூலம் அவர்களால் தமிழ்நாடு மக்களுக்கு உதவி செய்ய முடியும்.

எதிர்காலத்தில் எது நடந்தாலும், பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியால் தமிழக அரசியலில் கால் பதிக்க முடியாது. தி.மு.க. அரசு சிறந்த பணியை செய்து வருகிறது. அவர்களின் செயல்பாட்டை மக்கள் விரும்பியுள்ளனர்" என்றார்.

தி.மு.க. கூட்டணி ஆட்சி அமைத்தால் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். மாணிக்கம் தாகூர் எம்.பி. ஆட்சியில் அதிகாரம் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

## கவிதை அரங்கம்!





ஓவர் நைட்ல் ஒபாமா
ஆக முடியாது அதற்கு
முயற்சியும் பயிற்சியும்
காலமும் தேவை

கவலை எனும்
கரப்பான்பூச்சியைக்
கொல்லுங்கள்
சுறுசுறுப்பு எனும்
ஹிட் அடித்து

மரத்தை பார்த்து கற்றுக்
கொள் தன்னை விட்டு
பிரியும் இலைகளை
கண்டுக் கொள்வதில்லை

கடைசி வரை நம்பிக்கை
இழக்காதே ஏனெனில்
கடைசி வரியில் கூட
உனக்கான வெற்றி
எழுதப்பட்டிருக்கலாம்

## வாழ்க்கை தத்துவம்...



நல்லவராய் இருப்பது
நல்லது தான்
ஆனால்
நல்லது கெட்டது தெரியாத
நல்லவராய் இருப்பது
நல்லதல்ல

உங்கள் பார்வை
நல்லதாக இருந்தால்
உலகம் அழகாக தெரியும்
உங்கள் வார்த்தைகள்
நல்லதாக இருந்தால்
உலகத்திற்கு நீங்கள்
அழகாக தெரிவீர்கள்

உங்கள் எண்ணங்களை
தூய்மைப்படுத்துங்கள்
இந்த உலகம்
உங்கள் எண்ணங்களை
வரவேற்கும்
உங்களை உயர்வாக
போற்றும்

## திருகு வலி !

" லாவண்யா, இங்க தனியா என்னால இருக்க முடியல்ல. பைத்தியமே பிடிச் சிடும் போல இருக்கு. துணைக்கிருந்த உங்கப்பாவும் போய் சேர்ந்துட்டார். அதனால நான் அங்க வந்து உங்கக் கூட இருக்கலாமான்னு மாப்பிள்ளைக் கிட்ட தயவு செய்து கேட்டு அனுமதி வாங்கேன் ."

மறுமுனையில் அம்மா புலம்பித் தீர்த்ததைக் கேட்ட லாவண்யாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

பெற்றோருக்கு ஒரே மகள் லாவண்யா. தந்தைக்கு மத்திய அரசைச் சார்ந்த ஒரு அலுவலகத்தில் வேலை. காலம் கடந்து பிறந்த மகளை போஸ்ட் கிராட்ஜு வேஷன் வரை படிக்க வைத்தார். பிறகு மிகவும் கஷ்டப்பட்டு மகளை பிரகாஷு க்கு மணம் செய்து வைத்தார். சில நாட்களில் மாரடைப்பில் போய்ச் சேர்ந்தார் லாவண்யாவின் தந்தை. குடும்ப ஓய்வூதியம் கிடைத்து வருகிறது அவள் தாய்க்கு. ஆனால் வாடகை வீடுதான் !

லாவண்யாவின் அம்மா இப்படிக் கேட்பது இரண்டாவது தடவை !

" அம்மா, கொஞ்ச நாள் பல்லைக் கடிச் சிக்கிட்டு பொறுமையாக இருந்துக்கோ. நான் உன் மாப்பிள்ளைக் கிட்டே நைஸா கப் பேசி உன்னை அழைச்சிக்கிறேன்."

என்று ஃபோனை கட் செய்தாள் லாவண்யா.

பின் பக்கம் நின்றவாறு லாவண்யா தன் அம்மாவிடம் பேசியதைக் கேட்டான் லாவண்யாவின் புருஷன் பிரகாஷ்.

" என்ன, உங்கம்மா இங்க வந்து இருக்கணும்னு பிரியப் படறாங்களா?"

திடுக்கிட்டு பின் பக்கம் திரும்பிப் பார்த்த லாவண்யா " ஆமாங்க.." என்று அசடு வழிந்தாள். "பாவம்ங்க எங்கம்மா ! தனியா இருக்க பயப்படறாங்க. அதான் இங்க வந்து நம்மோட இருக்க பிரியப் படுறாங்க. நீங்க சரின்னு சொன்னால் நாளைக்கே கூட்டிக்கிட்டு வந்துடறேன் . என்ன சொல்றீங்க?"

" ம்..அதுவும் சரிதான். இப்போ ஒரு இடம் காலியாகப் போறதில்லயா?..அந்த இடத்தில் உங்கம்மா வந்து இருந்து கொள்ளட்டும்." வாழைப்பழத்தில் ஊசி சொருகுவது போல் பிரகாஷ் சொல்ல ஆடிப் போனாள் லாவண்யா.

மாமியார் இடத்தில் தன் அம்மா வந்து இருக்கட்டும் ஏன்ற அர்த்தத்தில் புருஷன் சொன்னது மனதில் கொஞ்சம் வலியை ஏற்படுத்தியது லாவண்யாவிற்கு.

ஏனோ மாமியாரை பிடிக்காமல் போனது லாவண்யாவிற்கு. ஆரம்பத்தில் நன்றாகப் பழகினாள் . நாள் செல்லச் செல்ல வெறுக்க ஆரம்பித் தாள். புருஷனிடம் மாமியாரைக் கொண்டு போய் ஹோமில் சேர்க்கச் சொல்லியிருந்தாள் லாவண்யா. இத்த னைக்கும் மாமியார் மிக மிக நல்லவள். லாவண்யாதான் சில சமயங்களில் மாமியாரிடம் எரிந்து விழுந்திருக்கி றாள். மாமியார் அக்கடாவென்று அடங்கி ஒடுங்கி இருப்பாள். இதையெ ல்லாம் பிரகாஷ் அறிந்தவையே! நேரம் வரட்டும், மனைவிக்கு பாடம் புகட்டலாமென்று ஏண்ணியிருந் தான். இப்போது வந்தது . சுருக்கென்று வார்த்தைகளைப் பிரயோகித்தும் விட் டான் !

சட்டென கலங்கிய கண்களுடன் புருஷனை ஏறெடுத்துப் பார்த்தாள் லாவண்யா.

" ஸாரிங்க ! தனக்கு வந்தால்தான் திருகு வலி தெரியும்கிறத நான் தெரிஞ்சிக் கிட்டேன். பட்டால் தான் தெரியறது. என்னை மன்னிச்சிடுங்க !" புடவைக் தலைப்பால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் லாவண்யா.

" சரி, வந்து இருக்கச் சொல்லு." என்று கூறிவிட்டு அகன்ற புருஷனை நன்றி பொங்கப் பார்த்தாள்.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*போடா, நீ முட்டாள் !*
*குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !*
*டைப்பிஸ்ட்: போடா, நீ தான் முட்டாள் !*
*மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?*



## தினம் ஒரு சமையல்



### மசாலா மிர்ச்சி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1. நீளமான பச்சை மிளகாய் | - 6 |
| 2. மஞ்சள் தூள் | - 1 டீஸ்பூன் |
| 3. மிளகாய் தூள் | - 1 டீஸ்பூன் |
| 4. மல்லி தூள் | - 1 1/2 டீஸ்பூன் |
| 5. சிறிய பச்சை மிளகாய் | - 2 |
| 6. மாங்காய் தூள் | - 1 டீஸ்பூன் |
| 7. கடுகு | - 1/2 டீஸ்பூன் |
| 8. உப்பு | - தேவையான அளவு |
| 9. எலுமிச்சை சாறு | - 1 டீஸ்பூன் |
| 10. எண்ணெய் | - 2 டீஸ்பூன் |

செய்முறை:



1. முதலில் பச்சை மிளகாயை ஒரு இன்ச் அளவிற்கு நறுக்கிக் கொள்ளவும். பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு சேர்த்து தாளித்து, பச்சை மிளகாய்களை சேர்த்து, மிதமான தீயில் வதக்க வேண்டும். பின்னர் உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கிளறி, மூன்று நிமிடம் பச்சை மிளகாய் நன்கு வதங்கும் வரை வதக்க வேண்டும்.

2. மிளகாயானது நன்கு வதங்கியதும், மிளகாய் தூள், மல்லி தூள், மாங்காய் தூள் சேர்த்து பிரட்டி விட வேண்டும். பிறகு எலுமிச்சை சாறு சேர்த்து, மிளகாயில் அனைத்து பொருட்களும் நன்கு ஒன்று சேரும் வரை வதக்கி இறக்கினால், சுவையான மசாலா மிர்ச்சி ரெடி!!!

## நொச்சி பயன்கள்



நொச்சியின் இலை மிகுந்த மருத்துவ பயன் உடையது என்பது அனைவரும் அறிந்ததே. அதில் பல்வேறு வலிகளை குணமாக்கும் சிறந்த மூலிகையாக பயன்படுவது கருநொச்சி. நொச்சி எப்படி மருந்தாகிறது. அதை நாம் எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இப்பதிவில் காண்போம்.

நீர்வளம் உள்ள இடங்களில் தானே வளரும் இயல்புடையது நொச்சி. இதன் இலை, பூ, வேர், பட்டை ஆகியவை கருப்பு நிறமாய் அமைந்த கருநொச்சி எல்லா இடங்களிலும் அரிதாக காணப்படுகின்றது. இலை வேதனை தணித்தல், சிறுநீர்ப் பெருக்குதல், நோய் நீக்கி உடல் நலம் மிகுத்தல், மாதவிலக்கைத் தூண்டுதல், நுண்புழுக்கொள்ளுதல் ஆகிய பண்புகளை உடையது. பட்டை சுரந் தணிந்து உடலை வலுவாக்கமும், சரளியகற்றி சிறுநீர் பெருக்கவும் பயன்படும்.

வலி நிவாரணி: நொச்சி இலை சாற்றுடன் மிளகுத்தூளும் சிறிது நெய்யும் கலந்து காலை, மாலை பத்தியத்துடன் சாப்பிட்டு வர மூட்டு வலி, இடுப்பு வலி, வாத வீக்கம் ஆகியவை தீரும். நொச்சி வேர் பட்டையை உலர்த்தி பொடித்து அதை தேனில் குழைத்து கொடுத்து வர வாத பிடிப்பு, நரம்பு வலி, வயிற்று வலி, நீர்க் கோவை ஆகியவை தீரும். நொச்சி இலையுடன் பாதியளவு மிளகு சேர்த்தரைத்து சுண்டைக்காய் அளவு காலை மாலை கொடுத்து வர குளிர் சுரம், செரியாமை உடம்பு வலி, கை கால் பிடிப்பு ஆகியவை தீரும்.

வேது பிடித்தல்: நொச்சி, வேம்பு, தழுதாழை, ஆடாதொடை, தும்பை, நாயுருவி, குப்பைமேனி, வேலிப்பருத்தி இவைகளை ஒரு கைப்பிடி எடுத்து முக்கால் அளவு நீர் உள்ள வாய் அகன்ற மண்கலத்தில் இட்டு கொதிக்க வைத்து வேது பிடிக்க வாத நோய்கள் தணியும். வாரம் இரு முறை பயன்படுத்தலாம். நொச்சி இலையை நீரிலிட்டு காய்ச்சி வாத வீக்கம் உள்ள இடங்களில் வேது பிடிக்க குணமாகும். இலையை வதக்கி துணியில் கட்டிக்கொண்டு ஒத்தடம் கொடுக்க கீழ்வாதம், வாத வீக்கம் ஆகியவை குணமாகும். கல்லீரல் மண்ணீரல் குணமாக: நொச்சியிலையை இடித்து பிழிந்து வடிகட்டிய சாற்றுடன் சமன் அளவு கோமியம் கலந்து பருகி வர கல்லீரல், மண்ணீரல் வீக்கம் குணமாகும்.

இதர பயன்கள்: இலையை தலையணையாக பயன்படுத்தி வர மண்டை இடி, கழுத்து வீக்கம் ,பிடரி வீக்கம், சன்னி, இழுப்பு, மீக்கடைப்பு ஆகியவை தீரும். நொச்சிப் பூவை உலர்த்தி பொடித்து கற்கண்டு கலந்து காலை ,மாலை தேனில் கொடுத்து வர ரத்த வாந்தி, இரத்தபேதி ஆகியவை தீரும். நொச்சி இலை, மிளகு, கிராம்பு, பூண்டு பல் ஆகியவற்றை வாயிலிட்டு மென்று சுவைத்து சாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கினால் ஆஸ்துமாவினால் ஏற்படும் மூச்சுத்திணறல் தீரும். இம்முறையை நீடித்துப் பயன்படுத்த நோய் முற்றிலும் அகலும். நொச்சி இலையை மென்மையாய் அரைத்து பற்று போட கட்டிகள் வீக்கங்கள் தீரும்.

## பராசத்தி படத்தில் சிவகார்த்திகேயன் தம்பியாக நடிக்க அதர்வா வாங்கிய சம்பளம்.. விவரம் இதோ



இப்படத்தில் சிவகார்த்திகேயனின் தம்பியாக மிக முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்திருந்தவர் நடிகர் அதர்வா. இவருடைய கதாபாத்திரத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

இயக்குநர் சுதா கொங்கரா இயக்கத்தில் பிரம்மாண்ட பொருட்செலவில் உருவாகி கடந்த வாரம் வெளிவந்த படம் பராசக்தி. இப்படத்தில் சிவகார்த்திகேயன் ஹீரோவாக நடிக்க ரவி மோகன் வில்லனாக நடித்திருந்தார். மேலும் ஸ்ரீலீலா கதாநாயகியாக இப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகியுள்ளார்.

இந்த நிலையில், பராசக்தி படத்தில் நடிப்பதற்காக நடிகர் அதர்வா வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தில் நடிக்க நடிகர் அதர்வா ரூ. 2 கோடி சம்பளம் வாங்கியதாக கூறப்படுகிறது.






நடிகை சாம்பவி. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய நபர் ஆவார். இந்த நிலையில், பொங்கல் ஸ்பெஷலாக தனது இன்ஸ்டாகிராமில் தன்னுடைய லேட்டஸ்ட் அழகிய புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

## பிரபாஸ் நடித்துள்ள ராஜா சாப் படத்தை நிராகரித்த இரண்டு முன்னணி நடிகர்கள்..



இயக்குநர் மாருதி இயக்கத்தில் பிரபாஸ் நடிப்பில் உருவாகி கடந்த வாரம் வெளிவந்த படம் ராஜா சாப். ஹாரர் பேண்டஸி கதைக்களத்தில் எடுக்கப்பட்ட இப்படத்தில் மாளவிகா மோகனன், நிதி அகர்வால், ரிதி குமார் ஆகிய மூன்று நடிகைகள் நடித்திருந்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த இப்படம் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. இதனால் வசூலில் அடி வாங்கி பாக்ஸ் ஆபிஸில் சரிவை சந்தித்துள்ளது.

இந்த நிலையில், இப்படத்தில் முதன் முதலில் நடிக்கவிருந்த பிரபாஸ் கிடையாது.

முதலில் இப்படத்தின் கதையை நடிகர் நாணியிடம் இயக்குநர் மாருதி கூறியுள்ளார். ஆனால், இப்படத்தில் நடிக்க மறுத்துள்ளார் நாணி.

அதன்பின் நடிகர் சூர்யாவிடம் இந்த கதையை கூற முயற்சி செய்துள்ளார். ஆனால், அதுவும் நடக்கவில்லை.

அதன்பின்தான் இந்த கதையை பிரபாஸிடம் கூறி ஓகே செய்துள்ளார் இயக்குநர் மாருதி.

# ’திருவாதிரை’ ஆருத்ரா தரிசனத்தின் மகிமைகள்

மாதங்களில் சிறந்தது மார்கழி! அம்மாதத்தில் வரும் நட்சத்திரங்களில் சிறந்தது திருவாதிரை! இரண்டு சிறப்புகள் ஒன்றாக சேரும் பொழுது அதன் மதிப்பும் சிறப்பும் பன்மடங்கு கூடிவிடுகிறதல்லவா! வாருங்கள் சிறப்புகளை ஒன்றொன்றாகப் பார்ப்போம்!

**1.வேண்டுவன வேண்டியவாறு பெறும் வழி**

இந்த திருவாதிரை திருநாள் பண்டிகையாகவும் விரதமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது. மார்கழி மாதம் நிறைந்த பௌர்ணமி நாளில் திருவாதிரை நட்சத்திரத்தில் சிவ ஸ்தலங்களில் இந்த தரிசனம் கிடைக்கிறது. இந்த நன்னாளில் நாம் அனைவரும் சிவ ஸ்தலங்களில் உள்ள நடராஜ பெருமானை அதிகாலையில் சென்று தரிசித்தும், அவரது அபிஷேகம் கண்டு ஆராதித்தும், வீடுகளில் களி மற்றும் கூட்டு செய்து சிவனுக்கு நிவேதனம் செய்தும், நல் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், செய்யும் தொழிலில் அபிவிருத்தி, மனதிருப்தி, முதலான நீங்காத செல்வங்களை யெல்லாம் வேண்டிப் பெறலாம்.

**2.ஆணவம் அடக்கிய படலம்**

27 நட்சத்திரங்களில் திரு என்ற அடைமொழியுடன் வரும் நட்சத்திரங்கள் இரண்டே ஆகும். ஒன்று திருவோணம் மற்றொன்று திரு ஆதிரை. ஆவணி திருவோண நட்சத்திரத்தில் வாமன அவதாரம் எடுத்து பெருமாள் மகாபலியின் ஆணவத்தை அடக்கினார். மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தில் சிவபெருமான் பிச்சாடனார் ஆக வெளிப்பட்டு தாருகாவன முனிவர்களின் ஆணவத்தை அடக்கினார். அதாவது கர்வம் கொண்ட தாருகாவன முனிவர்கள் சிவபெருமானை அழிக்க வேண்டி யாகம் செய்து அதிலிருந்து வெளிப்பட்ட யானை, புலி முதலானவற்றை பிச்சாடனார் மீது ஏவினர். எதிர்கொண்ட சிவபெருமான் புலியை கிழித்து அறை ஆடையாகவும் யானையை கிழித்து மேலாடையாகவும் மற்றும் அதைத்தொடர்ந்து வந்த அனைத்தையும் தன் அணிகலன்கள் ஆகவும் ஏற்று அவர்கள் ஆணவத்தை அடக்கினார். பின் முனிவர்கள் வருந்தி சிவனிடம் மன்னிப்பு கேட்க நடராஜராக ஆனந்த தாண்டவம் ஆடி அவர்களுக்கு ஆருத்ரா தரிசனம் தந்தார். ஆக்கல் காத்தல் அருளுதல் மறைத்தல் அழித்தல் ஆகிய ஐந்து தொழில்கள் செய்யும் பஞ்சாட்சரமான சிவபெருமானின் சிறப்பை உணர்த்துவதே இந்த ஆருத்ரா தரிசனமாகும்.

**3.திருவாதிரை நோன்பு**

ஒரு முறை த்ரேதாயுகா என்ற பார்வதி தேவியின் பக்தை திருமணம் முடிந்த மூன்றாம் நாளில் கணவனை இழந்தார். அதனால் அவர் தேவியின் பாதங்களை பற்றி கதறி அழுதார். அந்த ஓசை தேவியின் காதுகளை எட்டியதும் தேவியும் சிவபெருமானும் எமனிடமிருந்து அவரது கணவர் உயிரை மீட்டு தந்து, அவர்களுக்கு பார்வதி பரமேஸ்வரராக இந்த மார்கழி திருவாதிரையில் தரிசனம் தந்து ஆசிர்வதித்தனர். அதனால்தான் பல இல்லங்களில் சுமங்கலிப் பெண்கள் இந்த திருநாளில் விரதம் இருந்து 21 வகையான காய்கறிகள் சமைத்து, அத்துடன் 21 எண்ணிக்கையில் அதிரசம் முதலான பலகாரங்களையும் தேவிக்கு நிவேதனம் செய்து, மஞ்சள் சரடு அணிந்து தங்களது கணவரின் நீண்ட ஆயுள், ஆரோக்கியம், தொழில் வளர்ச்சி, மன மகிழ்ச்சி, சுப நிகழ்ச்சி முதலானவற்றை வேண்டி பெறுகின்றனர்.

**4. சிறப்பு ஆருத்ரா தரிசன ஸ்தலங்கள்**

திருவாதிரை என்று தமிழில் சொல்லப்படும் இந்த நட்சத்திரம் வடமொழியில் ஆருத்ரா என்று சொல்லப்படுகிறது. மார்கழி ஆருத்ரா நாளில் சிவ ஸ்தலங்கள் அனைத்திலும் இந்த ஆருத்ரா தரிசனம் மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டாலும் தில்லை என்கின்ற சிதம்பரத்திலும் திருவாருரிலும் உத்தரகோசமங்கையிலும் இத்திருநாள் மிகவும் விசேஷமாக கொண்டாடப்படுகிறது. முடிந்த வரையில் அன்று இத்திருத்தலங்களில் சென்று சிவபெருமானின் அருள் பெறுவது சாலச் சிறந்ததாகும்.

**5.தில்லை என்கின்ற சிதம்பர தரிசனம்.**

தில்லையில் ஆருத்ரா தரிசனத்தன்று தேவர்கள் அனைவரும் வந்து நடராஜ பெருமாளை வேண்டி அருள் பெறுவதாக ஐதீகம் உள்ளது.

பதஞ்சலி முனிவரும் வியாகரபாதரும் தவமாய் தவமிருந்து ஆடவல்லானின் ஆடலை காண விழைந்த போது சிவபெருமான் இந்த மார்கழி திருவாதிரை பௌர்ணமி நாளில் தான் ஆனந்த தாண்டவம் ஆடி அவர்களுக்கு தரிசனம் தந்தார். தில்லை அருகே சேந்தனார் என்ற சிவனடியார் தினமும் விறகு வெட்டி அவற்றை விற்று அதில் உணவுக்கான பொருட்களை வாங்கி அவர் துணைவியார் உதவியுடன் சமைத்து இருவரும் ஒரு சிவனடியாருக்கு உணவளித்து பின்னரே உண்பர். மார்கழி மாதத்தில் ஒரு நாள் மழை பெய்ததால் விறகு வெட்ட முடியாமல் வீட்டில் இருந்த அரிசி குருணையில் களி செய்து தோட்டத்தில் பறித்த காய்கறியில் ஒரு கூட்டும் செய்து சிவனடியாரின் வருகைக்காக காத்திருந்தனர்.

நீண்ட நேரம் மழையால் யாருமே வரவில்லை. அப்பொழுது மழையில் நனைந்து கொண்டு சிவபெருமானே அடியார் வடிவில் சேந்தனாரின் பெருமையை உலகிற்கு உணர்த்த அவர்கள் இல்லம் புகுந்தார். சிவனடியாரைக் கண்டு மனமகிழ்ந்த தம்பதியர் அவருக்கு களியும் கூட்டும் படைத்தனர். களியை விரும்பி உண்ட சிவனடியார் மிகவும் புகழ்ந்து கொஞ்சம் களியை வீட்டிற்கு எடுத்துச் செல்வதா கூறி தனது மேலாடையில் முடிந்து கொண்டு நாளை தேர் பவனி காண வாருங்கள் என்று விண்ணப்பித்து விட்டு மறைந்தார்.

அடுத்த நாள் திருவாதிரை காலை கோவிலைத் திறந்தவர்கள் இறைவனின் உதட்டிலும் இறைவனை சுற்றியும் களி சிந்தி இருப்பதைக் கண்டு திகைத்தனர். பின்னர் தேரில் நடராஜரின் ஊர்வலம் புறப்பட்டது. மழையால் ஏற்பட்ட சகதியில் தேர் சக்கரங்கள் சிக்குண்டு நின்றது. பக்தர்கள் செய்வதறியாது திகைத்தனர். அப்பொழுது ஓர் அசரீர் ஒலித்தது. சேந்தா பல்லாண்டு பாடு என்றது. வைணவத்தில் பெரியாழ்வார் பெருமாளுக்கு பல்லாண்டு பாடினார் சைவத்தில் அதுவரை பாடிய அறியாத சேந்தனார் இறை அருளாள் மன்னுக தில்லை வளர்க HOநம் பக்தர்கள் பல்லாண்டு கூறுதுமே என்று 13 பாடல்கள் மூலம் 7பல்லாண்டு பாடியபடி தேர் வடத்தை இழுத்தார். தேர் அழகாக நகர்ந்தது. சேந்தனார் புகழை உலகம் அறிந்தது. அது முதலே களி கூட்டு செய்து நடராஜ பெருமானுக்கு நிவேதனம் செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

களி என்றால் ஆனந்தம். அஞ்ஞானம் நீங்கி மெய்ஞானம் எனும் ஆனந்தத்தை சத் சித் ஆனந்தம் அருளால் அடைவதையே அது உணர்த்துகிறது. தில்லை ஆருத்ரா தரிசனத்தின் மகிமையை என்னவென்று புகழ்வது.

**6. திருஆரூர்**

திருவாரூரிலும் ஆருத்ரா தரிசனம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஒருமுறை திருஞானசம்பந்தர் திருவாரூர் செல்ல முடியாததால் அங்கே நடைபெற்ற ஆருத்ரா தரிசனம் குறித்து சொல்லுமாறு திருநாவுக்கரசரிடம் வேண்டினார். அவரும் முத்துவிதான மணிப்பொற் கவரி முறையாலே என்று தொடங்கும் நாலாம் திருமுறை பாடல் மூலமாக முத்து விதானத்தில் மணிப்பொன் கவரி வீச நடராஜர் எழுந்து அருளிய காட்சியையும் பக்தர்களும் பெண்களும் வென் திருநீர் அணிந்த சிவனடியார்களும் சூழ தான் கண்டு களித்த அற்புதமான ஆருத்ரா தரிசன காட்சியையும் மேற்படி திருமுறைப் Yபாடலால் விவரிக்க, சிறுவனான சம்பந்தர் கண்ணீர் மல்க மனக் கண்ணில் அந்த காட்சியை கண்டு ரசித்தாராம். அப்பப்பா நமக்கும் மெய் சிலிர்க்கிறத ல்லவா! இங்கே நடராஜரின் வலது கால் எந்திரத்தால் மூடப்பட்டிருக்கும். வருடத்தில் இருமுறையே பக்தர்கள் அந்தப் பாத தரிசனம் செய்ய இயலும். அவை மார்கழி திருவாதிரை நாளிலும் பங்குனி உத்தர நாளிலும் நிகழும். எனவே ஆருத்ரா தரிசனத்தன்று திருவாரூரில் பக்தர்கள் கூட்டம் வலது பாத தரிசனத்திற்காக அலைமோதும்.



**7. உத்தரகோசமங்கை**

சிவபெருமான் அபிஷேகப் பிரியர் ஆனால் நடராஜ பெருமானுக்கு வருடத்தில் ஆறு முறையே அபிஷேகம் நடைபெறுகிறது. வருடத்தின் கடைசி அபிஷேகம் இந்த ஆருத்ரா திருநாளில் நடைபெறும். உத்தரகோசமங்கையில் இந்த அபிஷேகம் அரிய ஒரு காட்சியாகும். இங்கு மரகத நடராஜரின் சந்தனக் காப்பு நீக்கப்பட்டு பாலபிஷேகம் நடை பெறும். அச் சமயம் அந்த பால் பச்சை நிறமாக மாறி அவர் மேனியை தழுவி செல்லும். அது ஓர் அற்புத நிகழ்வாகும். இதனைக் காண பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து அபிஷேகம் கண்டு ஆருத்ரா தரிசனத்தில் மகிழ்ந்து போவார்கள்.

**8.திருவெம்பாவைநோன்பு**

இந்த மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் திருவாதிரைக்கு முந்திய 9 நாட்களிலுமே விடியற்காலை எழுந்து குளித்து உமையொரு பாகனைத் துதித்து திருவெம்பாவை நோன்பிருந்து நல்ல சிவனடியாரே தனக்கு கணவராக அமைய வேண்டும் என்று வேண்டி திருவாதிரை திருநாளில் அந்த நோன்பினை முடிப்பார்கள். திருவெம்பாவை பாடல்களும் இந்த சிறப்பினையே உணர்த்துகிறது. ஆருத்ரா தரிசனத்தின் சிறப்பினை இதுவரை கண்டோம் நாம் அனைவரும் அந்த நன்னாளில் களி, கூட்டு செய்து சிவகாமி சமேத நடராஜரை துதித்து சகல சௌபாக்கியங்களும் பெறுவோம்.



**வனஜா நாகராஜன்**
யு.எஸ்.ஏ

---

# தினம் ஒரு தலைவர்கள்
# வ.த.சுப்ரமணிய பிள்ளை வரலாறு

**வ.த.சுப்ரமணிய பிள்ளை (டிசம்பர் 11,1846- ஏப்ரல் 17,1909 ) வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை. தமிழறிஞர். திருப்புகழ் பாடல்களை தேடிக் கண்டடைந்து தொகுத்து வெளியிட்டார். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.**

வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை செங்கல்பட்டில் டிசம்பர் 11,1846-ல் தணிகாசலம் பிள்ளை-இலட்சுமி அம்மாளுக்கு பிறந்தார். திருத்தணிகை முருகன் இவர்களது குலதெய்வம். தணிகாசலம் பிள்ளை தனி ஆசிரியர் மூலம் வீட்டிலேயே சுப்ரமணிய பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி அளித்தார். தமிழும் தெலுங்கும் பயின்ற சுப்ரமணிய பிள்ளை 1857-ல் செங்கல்பட்டு மிஷன் ஸ்கூலில் சேர்ந்து உயர்நிலைக் கல்வியை முடித்து அங்கேயே சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் பள்ளி ஆய்வுக்காக வந்த வில்லியம் மில்லர் இவருடைய அறிவுத்திறன் கண்டு சென்னைக்கு வந்து மாகிண்டோஷ் ஸ்காலர்ஷிப் தேர்வு எழுதி வென்றால் தகுந்த வேலை கிடைக்கும் என்றார். அவ்வாறே சென்னை சென்று தேர்வெழுதி வென்றார். மில்லர் வாக்களித்தபடி இவருக்கு மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் தொகை கிடைத்தது. தொடர்ந்து U.C.S. தேர்வு எழுதி வென்றார். எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சுப்ரமணிய பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மில்லரின் பரிந்துரையின் பேரில், ஸ்காட்லாண்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியப்பணியில் சேர்ந்தார். 1868-ல் வள்ளியம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. பின்னர் ஆசிரியர் பணியில் இருந்து விலகி மில்லரின் நண்பர் ஹாட்ஸன் துரையின் பரிந்துரையின் பேரில் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். தலைமை எழுத்தராக பதவி உயர்வு பெற்று பின்னர் முன்சீஃப் தேர்வெழுதி வென்று 1882-ல் கடலூருக்கு மாவட்ட முன்சீஃப் ஆக நியமிக்கப்பட்டார். சோளிங்கர், விழுப்புரம் உள்ளிட்ட சில இடங்களில் பணியாற்றிய பின்னர் நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்றார்.

நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்ற பின்னர், மே 31, 1888-ல் அவர் எழுதிய குறிப்பில் "பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக் கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாமக்கல்லில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்பு கும்பகோணம் சென்றார். கும்பகோணம் பற்றி தனது நாட்குறிப்பில் "கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன்படுகிறது" என்று எழுதியிருக்கின்றார். பின்னர் திருத்துறைப்பூண்டியில் சில ஆண்டுகாலம் வசித்தார். மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் முன்சீஃபாகப் பணியாற்றிய பிள்ளை, 1901-ல் பணி ஓய்வு பெற்றார்.

வ.த.சுப்ரமணிய பிள்ளையின் மகன் புகழ்பெற்ற தமிழறிஞரான வ.சு. செங்கல்வராய பிள்ளை. சுப்ரமணிய பிள்ளையின் திருப்புகழ் பதிப்புப்பணி செங்கல்வராயபிள்ளையால் முன்னெடுக்கப்பட்டது

முருக வழிபாடு ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினங்களில் தவறாது முருகன் ஆலயத்திற்குச் செல்வதும், பாடல் பாடுவதும் இவர் வழக்கமாக இருந்தது. தினமும் தவறாமல் 32 முறை ’தணிகையன் துணை’ என்று எழுதியபின் தணிகேசன் மீது பாடல் பாடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

மண்ணாசை என்கின்ற
மாயையில் வீழ்ந்து
மதிமயங்கி
எண்ணாது உனை
மறந்தேயிருதேன்
இனியாகிலும் என்
அண்ணா உன்றன்
பொன்னடிக் கமலம்
வந்தடையும் வண்ணம்
தண்ணார் அருள்புரியாய்
தணிகாசல சண்முகனே."

என்று திருத்தணிகை முருகன் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சிவபெருமான், உமையம்மை, மகாவிஷ்ணு, விநாயகர், நால்வர் மீதும் இவர் பல்வேறு காலகட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். திருப்புகழில் உள்ள 274 பாடல் பெற்ற தலங்களில் 176 இடங்களுக்குச் சென்று தரிசித்திருக்கிறார்.



திருப்பணிகள் அறச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை பல்வேறு மடங்களுக்கும், ஆலயங்களுக்கும் திருப்பணிகள் செய்தார். விளக்குகள் அளிப்பது, பாத்திரங்கள், ஆலயமணிகள், வேல், ஆபரணங்கள் போன்றவற்றைத் தருவது, ஆலயங்களைப் புதுப்பிப்பது, கவனிப்பின்றி இருக்கும் தெய்வச் சிலைகளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்தார். மதுரையில் இருக்கும் பழமுதிர்சோலை ஆலயம் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அதைச் சீர்செய்வதில் முன்னின்றவர் பிள்ளை. சைவப் பணிக்காகவே பிறந்த நகரத்தார்களுக்கு இவர் "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்பதை எழுதி அனுப்பி ஆலயத்தைச் சீர்த்திருத்துமாறு வேண்டிக் கொண்டார். இவர் முயற்சியின் பேரில் நாளடைவில் ஆலயம் சீரமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது.

திருப்புகழ் சுவடிகளுக்காக தொடர்ந்து பயணம் செய்தார். உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்கு கடிதம் எழுதி சுவடிகள் கோரினார். 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. மார்ச் 20, 1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன. மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, அனந்த ராம ஐயர் போன்றவர்களின் உதவியுடன் திருப்புகழ் முதல் பதிப்பை வெளியிட்டார். ஜூன் 5,1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். ஏப்ரல் 9, 1895 அன்று திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார். சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் ஏப்ரல், 9 1895 அன்று இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். ’கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது’. (ரெங்கையா முருகன்
கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அந்தத் தொகுப்பிற்கு தமிழறிஞர்களிடையே மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்த பாகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையும் பிள்ளைக்கு உண்டாக்கியது. உடனே அந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். ஓய்வுபெற்றபின் தமது இறுதிக் காலம் முழுக்கத் திருப்புகழ் பாடல்களைத் தொகுப்பதிலேயே ஈடுபட்டார். 1902-ல் திருப்புகழ் இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிட்டார். திருப்புகழ் மூன்றாவது பாகத்தைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறுவதற்கு முன் மறைந்தார்.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை சனிக்கிழமை 17.01.2026

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடி

**திருப்பதி, ஜன.17:**

உலகப் புகழ்பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு உலகெங்கிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து பகவானை தரிசனம் செய்கின்றனர். இதன்படி திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 76 ஆயிரத்து 289 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 27 ஆயிரத்து 586 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர் அன்று ஒருநாள் உண்டியல் காணிக்கையாக ரூ.3 கோடியே 84 லட்சம் கிடைத்தது. வைகுண்டம் கியூ காம்ப்ளக்சில் 11 கம்பார்ட்மெண்டு களில் பக்தர்கள் நிரம்பினர். தேதி, நேரம் (டைம் ஸ்லாட்) குறிப்பிடப்பட்ட டோக்கன்கள் இல்லாமல் இலவச தரிசனத்தில் சென்ற பக்தர்களுக்கு 16 மணிநேரம் ஆனதாக கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மேற்கு வங்காளத்தில் நிபா வைரசின் பரவல் அதிகரிப்பு; வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட 120 பேர்

**கொல்கத்தா, ஜன.17:**

மேற்கு வங்காளத்தில் கடந்த சில நாட்களாக நிபா வைரசின் பரவல் அதிகரித்து காணப்படுகிறது. இதனால், தொற்று உறுதியான 2 நர்சுகள் கடந்த திங்கட்கிழமை சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும், அதில் பலனில்லை. இதனால் அவர்கள் 2 பேரும் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் ஆண் நர்ஸ் ஒருவர், புர்பா மேதினிப்பூர் மாவட்டத்தில் வசித்து வருபவர். பெண் நர்ஸ் புர்பா பர்தமான் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர்கள் தவிர, டாக்டர், நர்ஸ் மற்றும் சுகாதார ஊழியர் என 3 பேருக்கும் தொற்று இன்று உறுதியாகி உள்ளது. இதனால், மொத்தம் 5 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில், 120 பேருக்கும் மேற்பட்டோரை தனிமைப்படுத்தி கொள்ளும்படி கூறி மேற்கு வங்காள அரசு வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது.

# காஷ்மீரில் வாட்டி எடுக்கும் குளிர்; ஸ்ரீநகரில் -5.2 டிகிரி வெப்பநிலை பதிவு

**ஸ்ரீநகர், ஜன.17:**

ஜம்மு காஷ்மீரில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் பொதுமக்களை வாட்டி எடுத்து வருகிறது. இதனால் பெரும்பாலான மக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். அவர்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் வெப்பநிலை மிகவும் குறைந்து -5.2 செல்சியஸ் அளவாக பதிவானது. அதிகாலை நேரங்களில் அடர்த்தியான வெண்பனி காணப்பட்டது. பனியால் சூழப்பட்ட குல்மார்க் பகுதியில் வெப்பநிலை ஜம்முவை விட சுமார் 8 டிகிரி குறைந்துள்ளது. தால் ஏரி உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகள் உறைந்து காணப்படுகின்றன. இந்நிலையில் அடுத்த வாரம் காஷ்மீரின் சமவெளிகளிலும், உயரமான பகுதிகளிலும் பனிப்பொழிவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குளிரை சமாளிக்க பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் நெருப்பை மூட்டி குளிர் காய்ந்து வருகின்றனர்.

# கேரளாவில் களைகட்டிய பொங்கல் கொண்டாட்டம்

**திருவனந்தபுரம், ஜன.17:**

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை தமிழர் உள்ள உலகின் அனைத்து பகுதிகளிலும் இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. கேரளாவிலும் பொங்கல் பண்டிகை வழக்கமான குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. கேரளாவில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்பட உயரதிகாரிகள் திருவனந்தபுரத்தில் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடினர். கேரள வருவாய்த்துறை செயலாளர் ராஜமாணிக்கத்தின் இல்லத்தில் நடந்த இந்த சேரநாட்டு பொங்கல் விழாவில் ஐஏஎஸ் அதிகாரிகளான தமிழ்நாட்டைச் சேர்ந்த தர்மலஸ்ரீ, ரஞ்சித், ஸ்ரீ லட்சுமி, போலீஸ் ஐஜிக்களான நிஷாந்தினி, அஜீதா பேகம், சதீஷ் பினோ மற்றும் உயர் அதிகாரிகள் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

# ஊழல் வழக்கில் இருந்து ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு விடுவிப்பு



**அமராவதி, ஜன.17:**

ஆந்திர முதல்-மந்திரியாக ஜெகன்மோகன் ரெட்டி இருந்த போது, சந்திரபாபு நாயுடு மீது ஆந்திர திறன் மேம்பாட்டு நிறுவன நிதி ரூ.300 கோடியை மோசடி செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கில் 2023-ம் ஆண்டு சந்திரபாபு நாயுடு கைது செய்யப்பட்ட நிலையில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில் 2024-ம் ஆண்டு நடந்த தேர்தலில் சந்திரபாபு நாயுடு மீண்டும் முதல்-மந்திரி ஆனார். இதைத்தொடர்ந்து, இந்த வழக்கை விசாரித்து வந்த ஆந்திர போலீசார், சந்திரபாபு நாயுடு மீது குற்றம் எதுவும் இல்லை என கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்தனர். இதை ஏற்றுக்கொண்ட கோர்ட்டு, ஊழல் வழக்கில் இருந்து சந்திரபாபு நாயுடுவை விடுவித்து உத்தரவிட்டது.

# ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் களைகட்டிய 'சங்கராந்தி'



**அமராவதி, ஜன.17:**

ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் பொங்கல் பண்டிகை, சங்கராந்தி பண்டிகையாக 4 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

அதன்படி போகிப்பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டது. பலர் தங்களின் வீடுகளின் முன் அதிகாலையே எழுந்து பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி கொண்டாடினர்.

திருமலையிலும் திருப்பதி தேவஸ்தானத்தினர் ஏழுமலையான் கோயில் முன் விறகு, உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு போகிப்பண்டிகை கொண்டாடினர். அப்போது அங்கிருந்த பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா என கோஷமிட்டு வழிபட்டனர். பல இடங்களில் எம்பி, எம்.எல்.ஏக்கள், அமைச்சர்கள் பொது மக்களுடன் இணைந்து போகிப்பண்டிகையை கொண்டாடினர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, அவரது சொந்த ஊரான நாராவாரிபல்லியில் போகிப்பண்டிகையை தனது குடும்பத்தாருடன் கொண்டாடினார். பொங்கல் பண்டிகையையொட்டி, ஆந்திராவில் சித்தூர், திருப்பதி மாவட்டங்களில் மஞ்சு விரட்டு நிகழ்ச்சிக்கு தடபுடலாக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாட்டுப் பொங்கலை முன்னிட்டு குப்பம், திருப்பதி அடுத்துள்ள ரங்கம்பேட்டை உள்ளிட்ட பல ஊர்களில் காளைகளை அலங்கரித்து, அவற்றின் கொம்புகளில் பரிசு பொருட்களை கட்டி, வரிசையாக விரட்டி விடுவர். இதே போன்று ஆந்திராவில் கோதாவரி மாவட்டங்களில் சேவல் பந்தயம் வெகு பிரபலம். குறிப்பாக இந்த சங்கராந்தி பண்டிகைக்கு பல கிராமங்களில் கூடாரங்கள் அமைத்து, அதில் சேவல் சண்டை 24 மணி நேரமும் நடைபெறுமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கு அரசியல், சினிமா பிரபலங்கள், தொழிலதிபர்கள் என பலர் 2 அல்லது 3 நாட்கள் வரை தங்கி இருந்து சேவல் சண்டையில் பெருமளவில் பந்தயங்கள் கட்டி வருகின்றனர். இந்த 4 நாட்களில் பந்தயத் தொகை பல கோடிகளை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜனநாயகன் பட வழக்கு: மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது சுப்ரீம் கோர்ட்டு

**புதுடெல்லி, ஜன.17:**

நடிகர் விஜய், நடிகைகள் பூஜா ஹெக்டே, மமிதா பைஜு உள்ளிட்டோர் நடித்துள்ள 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க மறுத்து, அந்த படத்தை மறுஆய்வு குழுவுக்கு தணிக்கை வாரியம் கடந்த 5-ந்தேதி பரிந்துரை செய்தது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், அந்த படத்தை தயாரித்துள்ள கே.வி.என்.புரோடக்‌ஷன் நிறுவனம் தொடர்ந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, 'ஜனநாயகன்' படத்தை மறுஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்துசெய்கிறேன். இந்த படத்துக்கு தணிக்கை சான்றிதழை உடனடியாக வழங்க வேண்டும்' என உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியம் உடனடியாக தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு டிவிஷன் பெஞ்ச், தனி நீதிபதி தீர்ப்புக்கு தடை விதித்தது. இதனால் ஜனநாயகன் பட தயாரிப்பு நிறுவனம் சுப்ரீம் கோர்ட்டை நாடியது. ஐகோர்ட்டு உத்தரவை நிறுத்திவைத்து ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட வேண்டும் என பட தயாரிப்பு நிறுவனம் தனது மனுவில் கூறியிருந்தது. இந்த மேல்முறையீட்டு மனு (வியாழக்கிழமை) விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனுவை விசாரிக்க விருப்பம் இல்லை எனக்கூறிய நீதிபதிகள் ஐகோர்ட்டை அணுகுமாறு உத்தரவிட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். மேலும் ஜனவரி 20 ஆம் தேதிக்குள் ஐகோர்ட்டு வழக்கை விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் எனவும் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், ஜனநாயகன் படம் பொங்கலுக்கு ரிலீஸ் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

# சபரிமலையில் தங்கம் மோசடி வழக்கு: முன்னாள் தேவஸ்தான உறுப்பினர் சங்கரதாஸ் கைது



**திருவனந்தபுரம், ஜன.17:**

சபரிமலை அய்யப்பன் கோவிலில் தங்கம் மோசடி தொடர்பான வழக்கை சிறப்பு புலனாய்வு குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வழக்கில் முதன்மை தந்திரி, முன்னாள் எம்.எல்.ஏ., திருவிதாங்கூர் தேவஸ்தான முன்னாள் தலைவர்கள் உள்பட 11 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் முன்னாள் தேவஸ்தான உறுப்பினரான சங்கரதாசும் சேர்க்கப்பட்டிருந்தார்.

இதற்கிடையே பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட அவர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்தநிலையில் சங்கரதாஸ் கைது செய்யப்படாத சம்பவத்திற்கு கேரள ஐகோர்ட்டு கண்டனம் தெரிவித்து விமர்சனங்களை முன் வைத்தது. மேலும் சங்கரதாசின் மகன் காவல் துறையில் உயர் பதவியில் இருப்பதால் அவரது கைதை தாமதம் செய்து வருவதாக அதிருப்தியையும் வெளிப்படுத்தியது.

இதனை தொடர்ந்து சிறப்பு புலனாய்வு குழுவினர் எஸ்.பி. சசிதரன் தலைமையில் ஆஸ்பத்திரிக்கு சென்று அவரை கைது செய்தனர். அதே சமயத்தில் அவரது உடல் நலம் கருதி மருத்துவர்கள் அறிவுரைப்படி அவர் மருத்துவமனையிலேயே தீவிர கண்காணிப்பில் உள்ளார். தங்கம் மோசடி வழக்கில் கைது செய்யப்படும் 12-வது நபர் சங்கரதாஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பாவை சொற்பொழிவு நிறைவு.. திருப்பதியில் ஆண்டாள் திருக்கல்யாணம்



**திருமலை, ஜன.17:**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆழ்வார் திவ்ய பிரபந்த திட்டத்தின் கீழ் புனித மார்கழி மாதத்தை கொண்டாடும் வகையில், நாடு முழுவதும் திருப்பாவை சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் புகழ்பெற்ற சொற்பொழிவாளர்கள் கலந்துகொண்டு திருப்பாவை சொற்பொழிவு நிகழ்த்தினர்.

நாடு முழுவதும் 233 மையங்களில் திருப்பாவை சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆந்திராவில் 76 மையங்களிலும், தெலுங்கானாவில் 57 மையங்களிலும், தமிழ்நாட்டில் 73 மையங்களிலும், கர்நாடகாவில் 21 மையங்களிலும், பாண்டிச்சேரியில் 4 மையங்களிலும், புதுதில்லியில் 4 மையங்களிலும், ஒடிசாவில் தலா ஒரு மையத்திலும் திருப்பாவை சொற்பொழிவு நடத்தப்பட்டது. ஏழுமலையான் கோவிலில் மார்கழி மாதத்தில் சுப்ரபாதத்திற்கு மாற்றாக திருப்பாவை பாராயணம் செய்யப்பட்டது.

திருப்பதி கே.டி.சாலையில் உள்ள அன்னமாச்சார்யா காலமந்திரம் மற்றும் வரதராஜ சுவாமி கோவிலில் திருப்பாவை சொற்பொழிவு பாராயணம் நடைபெற்றது. கடந்த மாதம் 16ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சிகள் மார்கழி கடைசி நாளில் நிறைவு பெற்றன.

மார்கழி மாத நிறைவு விழாவையொட்டி, திருப்பதி அன்னமாச்சார்யா கலாமந்திரத்தில் இன்று சுவாமி-ஆண்டாள் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. இதையொட்டி ஆண்டாள் (கோதை) மற்றும் ரங்கநாத சுவாமி உற்சவர்கள் மேடையில் எழுந்தருளினர். பின்னர், வேத மந்திரங்கள் முழங்க, அன்னமாச்சார்யா திட்டக் கலைஞர்களின் குரல் இசைக்கு மத்தியில் திருக்கல்யாணம் நடைபெற்றது.

# அனுமன் சிலையை 4 மணிநேரம் சுற்றிவந்து வழிபட்ட நாய்!



**புதுடெல்லி, ஜன.17:**

உத்தரப் பிரதேசத்தில் உள்ள பழமை வாய்ந்த கோயிலில் அனுமன் சிலையை, நாய் ஒன்று சுமார் 4 மணிநேரத்துக்கும் மேலாக சுற்றியவாறு வழிபாடு செய்துள்ள நிகழ்வு பலரிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் பிஜ்னோர் பகுதியிலுள்ள பழமை வாய்ந்த அனுமன் கோயில் அமைந்துள்ளது. பண்டிகை நாள்களையொட்டி இக்கோயிலுக்கு அதிகாலை முதலே மக்கள் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், கோயில் வளாகத்திலுள்ள அனுமன் சிலையை அப்பகுதியிலுள்ள நாய் ஒன்று அனுமன் சிலையை சுற்றிவந்து வழிபாடு செய்தது. கோயிலுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவரும் இதனை வியப்புடன் கண்டுரசித்தனர்.

சுமார் 4 மணிநேரமாகத் தொடர்ந்து அனுமன் சிலையை சுற்றி வந்து நாய் வழிபட்டது, பக்தர்களை வியப்பில் ஆழ்த்தியது. இதனை கோயிலுக்கு வந்திருந்த பக்தர் ஒருவர் விடியோ எடுத்துப் பதிவிட்டுள்ளார். இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

# 600 தெரு நாய்கள் படுகொலை: தெலங்கானாவில் வழக்கு



**ஹைதராபாத், ஜன.17:**

தெலங்கானா மாநிலத்தில் ஊராட்சி மன்ற தேர்தல் நடைபெற்றபோது, தாங்கள் வெற்றி பெற்றால் தெரு நாய்களை ஒழிப்பதாக வேட்பாளர்கள் சிலர் வாக்குறுதி கொடுத்திருந்தனர்.

இந்நிலையில், காமாரெட்டி, ஹனும கொண்டா உள்ளிட்ட மாவட்டங்களில், ஷாயம்பேட், ஆரேபல்லி, பால்வஞ்சா உள்ளிட்ட 7 பஞ்சாயத்துக்களில் கடந்த 15 நாட்களில் 600-க்கும் மேற்பட்ட தெரு நாய்களுக்கு சிலர் விஷ ஊசி செலுத்தியும், சாப்பாட்டில் விஷம் வைத்தும் படுகொலை செய்து, குழி தோண்டி புதைத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

சில நாட்களில் இந்த விஷயம் தெரியவந்ததைத் தொடர்ந்து, புளூ கிராஸ் அமைப்பினர் மற்றும் நாய் பிரியர்கள் அந்தந்த போலீஸ் நிலையங்களில் புகார் அளித்துள்ளனர். இந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்கு பதிவு செய்து, புதைக்கப்பட்ட தெரு நாய்களின் உடல்களை மீட்டு அவற்றுக்கு பிரேதப் பரிசோதனை செய்தனர். இது தொடர்பான விசாரணையில், ஜகத்தியால் மாவட்டம், தர்மபுரி நகராட்சிக்கு உட்பட ஒரு இடத்தில் ஒருவர் பகிரங்கமாக தெரு நாய்களுக்கு விஷ ஊசி செலுத்துவதை கண்காணிப்பு கேமரா மூலம் கண்டறிந்துள்ளனர்.

# அமெரிக்கா, ஐரோப்பாவுக்கான இந்திய விமான சேவை பாதிப்பு

**புதுடெல்லி, ஜன.17:**

ஈரான் நாட்டில் அயோதுல்லா அலி காமேனி தலைமையிலான ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்து உள்ளது. அதிகரித்துள்ள பணவீக்கம், அதன் தொடர்ச்சியாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் அதிருப்தி அடைந்துள்ள மக்கள் தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரானின் 30-க்கும் மேற்பட்ட மாகாணங்களில் 100 நகரங்களில் இன்றும் போராட்டம் நீடித்து வருகிறது. போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பாதுகாப்பு படையினர் கைது செய்து வருகின்றனர். வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. நிலைமை சீரான பின்னர் மீண்டும் இணையதள சேவை வழங்கப்படலாம் என கூறப்படுகிறது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 3,428 பேர் பலியாகி உள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

உள்நாட்டு போராட்டம் மற்றும் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஈரான் அரசு தன்னுடைய வான்வெளியை மூடியுள்ளது. இதனால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்கான இந்திய விமான சேவை பாதிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்காவுக்கான 3 விமானங்களை ஏர் இந்தியா விமான நிறுவனம் ரத்து செய்துள்ளது. இதன்படி, டெல்லியில் இருந்து அமெரிக்காவின் நியூயார்க், நியூவார்க் நகரங்களுக்கான 2 விமானங்கள் மற்றும் மும்பையில் இருந்து நியூயார்க் நகரத்திற்கான விமானம் ஒன்றும் ரத்து செய்யப்பட்டு உள்ளது.

# சத்தீஷ்காரில் மேலும் 29 நக்சலைட்டுகள் சரண்

**சுக்மா, ஜன.17:**

சத்தீஷ்காரில் நக்சலைட்டுகளுக்கு எதிராக மத்திய-மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. குறிப்பாக வருகிற மார்ச் மாதத்துக்குள் நக்சலைட்டுகளை ஒழிக்க மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா சபதம் ஏற்றுள்ளார். அதேநேரம் சரணடையும் நக்சலைட்டுகளுக்காக மறுவாழ்வு நடவடிக்கைகளும் மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. இதை பயன்படுத்தி ஏராளமான நக்சலைட்டுகள் சரணடைந்து வருகின்றனர்.

அந்தவகையில் சுக்மா மாவட்டத்தில் நக்சலைட்டு அமைப்பில் முன்னணியில் செயல்பட்டு வந்த 29 நக்சலைட்டுகள் போலீசாரிடம் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர். இதில் தலைக்கு ரூ.2 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டு இருந்த போடியம் புத்ரா என்பவர் முக்கியமானவர் ஆவார்.

கோகுண்டா பகுதியில் இயங்கி வந்த இவர் பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர் ஆவார். முன்னதாக கடந்த 7-ந்தேதியும் இந்த மாவட்டத்தில் 26 நக்சலைட்டுகள் சரணடைந்தது குறிப்பிடத்தக்கது.




## புகாரை வாபஸ் பெறுமாறு பெண்ணை மிரட்டிய போலீஸ் இன்ஸ்பெக்டர் கைது



**ராஜபாளையம், ஜன.17:** விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே செட்டியார்பட்டி கிராமத்தை சேர்ந்தவர், மாலதி (வயது 35). இவரிடம் 33 பவுன் நகையை பெற்று மோசடி செய்ததாக அளித்த புகாரில் வழக்குப்பதிவு செய்த தளவாய்புரம் போலீசார் ஸ்ரீவில்லிபுத்தூர் சத்யா நகரை சேர்ந்த ராம்குமார் (36) என்பவரை 2023-ம் ஆண்டு கைது செய்தனர்.

இதுகுறித்த வழக்கு விசாரணை ஸ்ரீவில்லிபுத்தூர் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் வழக்கை வாபஸ் பெறுமாறு ராம்குமார், மாலதியை மிரட்டியதாக கூறப்படுகிறது. மேலும் மாலதியை செல்போனில் தொடர்பு கொண்ட சத்யசீலா என்பவர் தானும் ராம்குமாரால் ஏமாற்றப்பட்டதாகவும் தன்னுடன் வந்து புகார் அளித்தால் இழந்த நகையை மீட்டு தருவதாக கூறி அழைத்து உள்ளார்.

இதை நம்பி ஸ்ரீவில்லிபுத்தூர் வந்த மாலதியை ராம்குமார், சத்யசீலா ஆகிய இருவரும் சேர்ந்து புகாரை வாபஸ் பெறுமாறு மிரட்டியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாலதி கொடுத்த புகாரின் பேரில் தளவாய்புரம் போலீசார் விசாரணை நடத்தி ராம்குமார், சத்யசீலா ஆகிய 2 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்து சத்யசீலாவை கைது செய்தனர். ராம்குமாரை தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சத்யசீலா ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் முகாமில் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்த போது ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த கொலை வழக்கில் ராம்குமார் உடன் கைது செய்யப்பட்டவர் ஆவார். இதையடுத்து பணி இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வேலூர் சிஎம்சி மருத்துவர் வீட்டில் அமலாக்கத் துறை திடீர் சோதனை



**வேலூர், ஜன.17:** வேலூர் சிஎம்சி மருத்துவர் குடியிருப்பில் அமலாக்கத்துறை அதிகாரிகள் குழுவினர் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர்.

வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் பணியாற்றி வருபவர் டாக்டர் பீஜியன். அதே வளாகத்தின் ஒரு பகுதியில் மருத்துவர்களுக்கான குடியிருப்பில் தங்கியுள்ளார். இன்று (ஜன.16) காலை சிஎம்சி மருத்துவமனைக்கு வந்த அமலாக்கத் துறை அதிகாரிகள் டாக்டர் பீஜியன் குறித்து விசாரித்துள்ளனர்.

பின்னர், அவர் தங்கியுள்ள குடியிருப்புக்கு சிஆர்பிஎப் வீரர்களுடன் சென்ற அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். சோதனை நடைபெறும் குடியிருப்பு வளாகத்தில் வெளியாட்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. இந்த சோதனையால் குடியிருப்பு வளாக பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.

## சிவகங்கை: சர்க்கரை ஆலையில் விஷவாயு தாக்கி 2 தொழிலாளர்கள் பரிதாப சாவு





**சிவகங்கை, ஜன.17:** சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தியை அடுத்த படமாத்தூரில் தனியார் சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இந்த ஆலையில் தற்போது பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விடுமுறை விடப்பட்டு உள்ளது. இதனால் சில ஊழியர்கள் ஆலையில் உள்ள எந்திரங்களை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது ஆலையில் பணிபுரியும் கரும்பாவூர் கிராமத்தை சேர்ந்த மோகனசுந்தரம் (வயது 35), சிவகங்கையை சேர்ந்த பொன்னழகு (58) ஆகியோர் ஆலையில் உள்ள மொலாசஸ் என்ற திரவப்பொருளுக்கான தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதற்காக மோகனசுந்தரம் முதலில் தொட்டிக்குள் இறங்கினர். அப்போது அதில் இருந்து வெளியான விஷவாயு அவரை தாக்கியது. இதில் அவர், உள்ளேயே மயங்கி விழுந்தார்.

இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த பொன்னழகு அவரை காப்பாற்ற உள்ளே இறங்கினார். அவரையும் விஷவாயு தாக்கியது. இதில் அவரும் மயங்கி விழுந்தார். 2 ஊழியர்களும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த சக ஊழியர்கள் தொட்டிக்குள் எட்டிப்பார்த்தனர். அப்போது 2 பேரும் மயங்கி கிடந்தது தெரியவந்தது. பின்னர் தொட்டியில் இருந்த விஷவாயுவை வெளியேற்றி 2 பேரையும் மீட்டனர்.

தொடர்ந்து அவர்களை சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்தபோது, மோகனசுந்தரம், பொன்னழகு ஆகியோர் ஏற்கனவே இறந்துவிட்டது தெரியவந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மானாமதுரை துணை போலீஸ் சூப்பிரண்டு பார்த்திபன் மற்றும் திருப்பாச்சேத்தி போலீசார், 2 பேரின் உடல்களையும் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தனியார் சர்க்கரை ஆலையில் விஷவாயு தாக்கி 2 தொழிலாளர்கள் இறந்த தகவல் அறிந்து, பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகள் ஆஸ்பத்திரிக்கு சென்று தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். ஆலை நிர்வாகத்தின் சார்பில் மோகனசுந்தரம், பொன்னழகு குடும்பத்திற்கு ரூ.2 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

## திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் கோவிலில் தை பிரம்மோற்சவம்- ஹம்ச வாகன சேவை



**திருவள்ளூர், ஜன.17:** 108 திவ்யதேசங்களில் ஒன்றான திருவள்ளூர் ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோவிலில் ஆண்டுக்கு 2 முறை பிரம்மோற்சவம் நடைபெறுவது வழக்கம். அதன்படி தை பிரம்மோற்சவம் நேற்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் விழாவில் தினமும் வாகன சேவை நடைபெறும். உற்சவர் ஸ்ரீ வீரராகவர், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக தினமும் வெவ்வேறு வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். அதன்படி முதல் நாளான நேற்று காலை 7 மணிக்கு தங்க சப்பரத்தில் பகவான் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவு 7 மணிக்கு சிம்ம வாகன சேவை நடைபெற்றது.

இரண்டாம் நாளான இன்று காலை 7.30 மணிக்கு ஹம்ச வாகனத்தில் வீரராகவர் எழுந்தருளி, மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவு 7 மணிக்கு சூரிய பிரபை வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

விழாவின் முக்கிய நிகழ்வான கருட சேவை (கோபுர தரிசனம்) நாளை (17ம் தேதி) காலை 5 மணிக்கு நடைபெற உள்ளது. கருட வாகனத்தில் வீரராகவர் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

இரவு 8 மணிக்கு அனுமந்த வாகனம் புறப்பாடு நிகழ்ச்சி நடைபெறுகிறது. 21ம் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது.

## நாகர்கோவில்-தாம்பரம் இடையே 18-ந்தேதி சிறப்பு ரெயில்: இன்று முன்பதிவு செய்யலாம்



**சென்னை, ஜன.17:** பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊர் சென்றவர்கள் வருகிற 18-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் சென்னை உள்பட பல்வேறு நகரங்களுக்கு திரும்புகிறார்கள். காலையில் இருந்து பஸ் மற்றும் ரெயில்களில் பயணத்தை தொடர முன்பதிவு செய்துள்ளனர். 19-ந்தேதி (திங்கட்கிழமை) பள்ளி, கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் திறக்கப்படுவதால் வெளியூர் சென்றவர்கள் சென்னை திரும்புவதற்கு தயாராகி வருகின்றனர். இதனால் தென் மாவட்டங்களில் இருந்து அதிகளவில் பஸ் மற்றும் ரெயில்கள் இயக்கப்படுகிறது. கூடுதலாக சிறப்பு ரெயில்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நாகர்கோவிலில் இருந்து தாம்பரத்திற்கு சிறப்பு ரெயில் விடப்பட்டுள்ளது. 18-ந்தேதி மாலை 5 மணிக்கு இந்த சிறப்பு ரெயில் (எண்.06160 ) புறப்பட்டு மறுநாள் (திங்கள்கிழமை) அதிகாலை 4.10 மணிக்கு தாம்பரம் வந்தடைகிறது.

இந்த அதிவேக சிறப்பு ரெயில் வள்ளியூர், நாங்குநேரி, திருநெல்வேலி, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி, விருத்தாசலம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக இயக்கப்படுகிறது. இந்த ரெயிலுக்கான முன்பதிவு நாளை (சனிக்கிழமை) தொடங்குகிறது.

## காஞ்சிபுரம் அருகே 5 டன் கரும்பில் உருவான திருத்தேர்

### 21 அடி உயரத்தில் அசத்தல்



**காஞ்சிபுரம், ஜன.17:** பொங்கல் பண்டிகை நேற்று விமரிசையாக கொண்டாடப்பட்டது. காஞ்சிபுரம் அடுத்த குண்டுக்குளம் கிராமத்தில் வசித்து வரும் விவசாயியான செந்தில்குமார் என்பவர் விவசாயிகளின் உன்னதத்தை போற்றும் வகையில் ஆண்டுதோறும் பொங்கல் திருநாளன்று விவசாயிகள் உற்பத்தி பொருளாக விளங்கும் செங்கரும்பின் மூலம் பொங்கல் பானை, ஜல்லிக்கட்டு காளைகள் என பல்வேறு வகையில் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

இந்த நிலையில் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது அவர் விவசாயிகள் பயிரிட்டு வரும் செங்கரும்பினை அனைவரும் வாங்கி பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வுக்காக 5 டன் செங்கரும்பினால் ஆன பிரம்மாண்டமான திருத்தேரை தயார் செய்து உள்ளார்.

5 டன் எடை கொண்ட கரும்பால் சுமார் 21 அடி உயரமும், 10 அடி அகலத்தில் மிகவும் பிரம்மாண்டமாக தத்ரூபமாக தேரை தயார் செய்து உள்ளார். தேரின் மேற்பகுதி, சக்கரம் என அனைத்தும் செங்கரும்பால் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு உள்ளது.

இதுகுறித்து செந்தில்குமார் கூறும்போது, உழவர்களின் உற்பத்தி பொருளை மேம்படுத்தவும், முன்னோர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பழமையான வீட்டை நினைவு கூறும் வகையில் தத்ரூபமாக கோவில் தேர் அமைத்தது மட்டுமல்லாமல் விவசாயிகள் பயிரிடும் செங்கரும்பை அனைவரும் வாங்கி பயன்படுத்த வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தவே இதனை மேற்கொண்டதாக தெரிவித்து உள்ளார். இந்த செங்கரும்பு திருத்தேர் பார்ப்பவரை ஒரு நிமிடம் மெய் மறக்க செய்யும் வகையில் தத்ரூபமாக உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை 10 நாட்கள் அப்பகுதி மக்கள் நேரில் பார்வையிட பார்வைக்காகவும் வைக்கப்பட்டு உள்ளது.

## நெல்லையில் மூதாட்டியை கட்டிப்போட்டு நகை- பணம் கொள்ளையடித்த வழக்கில் 2 பேர் கைது



**நெல்லை, ஜன.17:** நெல்லை மாவட்டம் சுத்தமல்லி பொன்விழா நகரை சேர்ந்தவர் சன்னியாசி, இவர் பா.ஜ.க. மாவட்ட வர்த்தக பிரிவு அணி செயலாளராக உள்ளார். இவர் தனது மனைவி மற்றும் குடும்பத்துடன் சென்னையில் வசித்து, அங்கு பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார்.

இதனால் சுத்தமல்லியில் உள்ள வீட்டில் அவரது மாமனார் மாரி, மாமியார் ஆண்டிச்சி (வயது 70) ஆகியோர் மட்டும் வசித்து வருகிறார்கள். கடந்த 8-ந்தேதி காலையில் வீட்டில் ஆண்டிச்சி மட்டும் தனியாக இருந்தார்.

அப்போது வீட்டுக்குள் புகுந்த கும்பல் ஆண்டிச்சியிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்பது போல் நடித்து அவரது கை, கால்களை கயிறு மூலம் கட்டி, அவர் அணிந்திருந்த தங்க சங்கிலி, மூக்குத்தி, கம்மல் என சுமார் 15 பவுன் நகைகளை பறித்தனர். தொடர்ந்து பீரோவை திறந்து அதில் இருந்த 10 சவரன் நகைகள், ரூ.6 லட்சம் பணத்தை கொள்ளையடித்தனர்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபர்களை வலைவீசி தேடி வந்தனர். மேலும் போலீஸ் சூப்பிரண்டு பிரசன்னகுமார் உத்தரவின்பேரில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு அந்த பகுதியில் பொருத்தப்பட்டி ருந்த சி.சி. டி.வி. கேமராக்களை ஆய்வு செய்தனர்.

மேலும் அந்த பகுதியில் சம்பவத்தன்று சந்தேகப்படும்படியான நபர்கள் நடமாட்டம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

நவீன தொழில்நுட்ப வசதியுடன் போலீசார் விசாரணை நடத்தி வந்த நிலையில், நேற்று பேட்டை அண்ணாமலை நகரை சேர்ந்த மணிகண்டன் மற்றும் அவரது உறவினரான ஜீவா நகரை சேர்ந்த சுந்தர் ஆகியோரை கைது செய்தனர். அவர்கள் 2 பேரும் போலீசாரிடம் சிக்கிக்கொள்ளாமல் இருக்க மூதாட்டியை தாக்கி கொள்ளையடித்த நகைகளை, புத்திசாலித்தனமாக செயல்களை செய்வது போல் சென்னையில் உள்ள ஒரு பைனான்ஸ் நிறுவனத்திற்கு சென்று அங்கு நகைகளை அடகு வைத்து பணமாக மாற்றியது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து சென்னைக்கு விரைந்துள்ள தனிப்படையினர், அந்த திருட்டு நகைகளை மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். திருட்டு கும்பலை திறம்பட கைது செய்த போலீசாரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பிரசன்னகுமார் பாராட்டினார்.

## நேப்பியர் பாலத்தில் இருந்து கூவத்தில் குதித்த அண்ணா பல்கலை. மாணவி உடல் கரை ஒதுங்கியது



**சென்னை, ஜன.17:** நேப்பியர் பாலத்தில் இருந்து கூவத்தில் குதித்த, அண்ணா பல்கலைக்கழக மாணவியின் உடல் நேற்று காலை கரை ஒதுங்கியது.

சென்னை நேப்பியர் பாலத்திலிருந்து கூவம் ஆற்றில் நேற்று முன்தினம் காலை இளம்பெண் ஒருவர் குதித்தார். இதைப் பார்த்து, அந்த வழியாகச் சென்ற வாகன ஓட்டிகள் உடனடியாக அண்ணா சதுக்கம் போலீஸார் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் கூவத்தில் குதித்த பெண்ணை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, அண்ணா சதுக்கம் போலீஸார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டனர். அப்போது. பாலம் அருகில் ஒரு பை கிடந்தது. அதில், கூவத்தில் குதித்த இளம்பெண்ணின் கல்லூரி அடையாள அட்டை இருந்தது. அதன்படி, அவர் அண்ணா பல்கலை.யில் எம்.பி.ஏ. 2-ம் ஆண்டு படிக்கும் மாணவி என்பது தெரியவந்தது.

மேலும், அவரது பெயர் யுவஸ்ரீ (25) என்பதும், அவர் சென்னையை அடுத்த பெருங்களத்தூர் ராகவேந்திரா 2-வது தெருவில் வசித்து வருவதும் தெரியவந்தது. அவரது பையில் இருந்த நோட்டில், 'வாழப் ''பெற்றோரும். பிடிக்கவில்லை. எனது தற்கொலைக்கு யாரும் காரணம் இல்லை. பெற்றோரும், சகோதரியும் என்னை மன்னித்து விடுங்கள்' என உருக்கமாக குறிப்பிட்டு இருந்தார்.

தீயணைப்பு துறையினர் கூவத்தில் குதித்து மாயமான யுவஸ்ரீயை படகு மூலம் நேற்று முன்தினம் இரவு வரை தேடினார்கள். அதன் பிறகு போதிய வெளிச்சம் இல்லாததால் தேடுதல் பணி நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நேற்று காலை மீண்டும் தேடுதல் பணி நடைபெற்றது. அப்போது, கடற்கரை முகத்துவாரம் அருகே மாணவியின் உடல்கரை ஒதுங்கியது. உடலை மீட்ட போலீஸார், பிரேத பரிசோதனைக்காக ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## தமிழகத்தில் அடுத்த 6 நாட்களுக்கு வானிலை எப்படி இருக்கும்?




**சென்னை, ஜன.17:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடகிழக்கு பருவமழை அடுத்த இரண்டு தினங்களில் தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்னிந்திய பகுதிகளிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புள்ளது.

இதனிடையே இன்று முதல் 20-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

21 மற்றும் 22-ந்தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-22° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30-31° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-22° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

## பொங்கல் பண்டிகை கொண்டாட்டம்- தொடர் விடுமுறையால் வெறிச்சோடிய சாலைகள்

**சென்னை, ஜன.17:** தமிழகம் முழுவதும் பொங்கல் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

நேற்று பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்ட நிலையில் இன்று மாட்டுப் பொங்கலும், நாளை காணும் பொங்கலும் கொண்டாடப்பட இருக்கிறது. பொங்கலையொட்டிய தொடர் விடுமுறை காரணமாக சென்னையில் வசிக்கும் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள் தங்களது ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நிறுவனங்களை நடத்தி வருபவர்களும் தங்களது நிறுவனங்களுக்கு விடுமுறை அளித்து விட்டு அவர்களும் ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சாலைகளில் வாகன போக்குவரத்து வெகுவாக குறைந்துள்ளது. இதன் காரணமாக சாலைகள் வெறிச்சோடியே காணப்படுகின்றன.

குறிப்பாக வடசென்னை பகுதிகளில் கனரக வாகனங்கள் எப்போதுமே அணிவகுப்பதை காண முடியும். துறைமுகம் நோக்கி செல்லும் கனரக வாகனங்களால் செங்குன்றம், புழல், மாதவரம், மணலி உள்ளிட்ட பகுதிகளில் கண்டெய்னர் லாரிகள் அதிக அளவில் சென்று வரும்.

பொங்கல் பண்டிகைக்கு தொடர் விடுமுறைவிடப்பட்டுள்ளதால் லாரி டிரைவர்களும் பொங்கல் பண்டிகையை கொண்டாடுவதற்கு சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். இதன் காரணமாக வடசென்னை பகுதிகளும் வாகனப் போக்குவரத்து இன்றியே காணப்படுகிறது.

நாளை காணும் பொங்கலுக்கு இன்று இருப்பதை விட வாகனப் போக்குவரத்து மிகவும் குறைவாகவே இருக்க வாய்ப்புள்ளதாகவும் போக்குவரத்து போலீசார் தெரிவித்துள்ளனர்.

## சங்கராந்தி பூஜை



நாகப்பட்டினம் மாவட்டம் பொருள் வைத்த சேரி அருள்மிகு ப்ஸ்ரீ ராமபத்திர பெருமாள் கோயில் ஆலயத்தில் மகர சங்கராந்தி பூஜை செய்ய பட்டு சர்க்கரை பொங்கல் விநியோகம் செய்யப்பட்டது.

## தை திருநாள் திருமயம் ஊஞ்சல் சேவை



தேவி ஸ்ரீ பூதேவி சமேத ஸ்ரீ திருமெய்யர் சிறப்பு அலங்காரத்தில் ஊஞ்சல் உத்ஸவத்தில் எழுந்தருளினார்கள்

## உத்திராயண புண்ணியகாலம் தீர்த்தவாரி,10 -ஆம் நாள் உற்சவம்.....



திருவண்ணாமலை ஜனவரி -15 உத்திராயண புண்ணியகாலம் தீர்த்தவாரி நடைபெற்றது. உத்திராயண புண்ணிய காலம் 10-ஆம் நாள் காலை உற்சவம் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன் மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.

## பொங்கல் திருவிழா



விக்கிரவாண்டி நல்ல தண்ணீர் குளம் அருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆற்காட்டம்மன் ஆலயத்தில் தை மாத பிறப்பு, பொங்கல் திருவிழாவை முன்னிட்டு காசிலிங்கம் பூசாரி அவர்களால் அபிஷேகம் பால், தயிர், சந்தனம், பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், எலுமிச்சம்பழம் மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் , மகாதீபாரதனையும் நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.

## பொங்கல் கொண்டாட்டம்



அருணை விருந்தினர் மாளிகையில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை மாண்புமிகு அமைச்சர் எ. வ. வேலு அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,கழகத் தோழர்கள் அனைவரும் இணைந்து சூர்ய பொங்கல் வைத்து கொண்டாடினார்கள்.

## பொங்கல் விழா



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே வி.வேடபட்டி புனித பால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் சமத்துவப் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் பாரம்பரிய உடையணிந்து பள்ளிக்கு வருகை தந்தனர். தலைமையாசிரியர் பூ.நாகராஜன் தலைமை தாங்கினார். பொங்கல் வைத்து சூரியனுக்குப் படைத்து வழிபட்டனர். ஒருவருக்கொருவர் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டனர். அனைவருக்கும் பொங்கல் மற்றும் கரும்பு வழங்கப்ப்பட்டது. ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மற்றும் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

## இடைக்காட்டூர் திரு இருதய திருத்தலத்தில் பொங்கல் விழா வெளிநாட்டுத் திருப்பயணிகள் பங்கேற்பு



**மானாமதுரை, ஜன.17:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள தமிழகத்தின் சுற்றுலா தலமான திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. இடைக்காட்டூர் கிராம மக்கள் பொங்கல் படைக்க எல்லா வீடுகளிலிருந்தும் பொருள்களை பவனியாக கொண்டுவந்து திரு இருதய ஆண்டவர் பாதத்தில் வைத்து வழிபாடு திருப்பலி நிறைவேற்றி பொங்கல் வைத்து கொண்டாடினார்கள்.

பொங்கல் பொருள்களை அருட்திரு முனைவர்பெங்களூர் புனித பேதுரு குருத்துவக் கல்லூரி சத்தியசீலன் பேராசிரியர் சத்ய சீலன் அர்ச்சித்து புனிதம் செய்தார்கள். ஆஸ்திரியா நாட்டைச்சார்ந்த அருள்தந்தையர்கள் கிளமென்ட் மற்றும் எலியாஸ் விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர்.

முன்னதாக அருள்திரு ஆனந்த் அமெரிக்கா நாட்டு நண்பர்கள் ஸ்டீபன் கார்லா மற்றும் இடா கேத்ரீன் திருத்தலத்திற்கு வருகை புரிந்து இறைவேண்டல் செய்தார்கள். சிவகங்கை மாவட்டம் மருதக்கண்மாயில் பிறந்து அமெரிக்கா நாட்டில் பணிபுரியும் அருள்திரு முனைவர் தைனேஸ் அல்போன்ஸ் நண்பர்கள் அருள்திரு ஜெராடு சுயிர் மற்றும் கிளின்டன் டிராகன் திருத்தலத்திற்கு வருகைபுரிந்து திரு இருதய ஆண்டவரின் ஆலயத்தில் இறைவேண்டல் செய்தனர். ஏராளமான திருத்தல திருப்பயணிகள் பொங்கல் வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு இறைவனுக்கும் இயற்கைக்கும் நன்றி தெரிவித்து செபித்தனர்.

நிகழ்வில் கிராம மக்களும வியாகுல அன்னை அருள்சகோதரிகள் ஜெஸி ஆரோக்கியமேரி ரோஸ்லின் கமிலி மற்றும் உள்ளூர் மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்வுகளை திருத்தல அதிபர் அருள்திரு முனைவர் ச. ஜான் வசந்த குமார் தலைமையில் நம்வாழ்வு துணை ஆசிரியர் அருள்திரு பிரிண்ஸ் மற்றும் அருள்சகோதரர் நிகாந் ஒருங்கிணைத்து செய்து இருந்தனர்.



*திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோவிந்தாபுரம் 20 வார்டு பகுதியில் பொங்கல் விழாவை முன்னிட்டு பெண்கள் 350 பேருக்கு இலவச பட்டு புடவைகளை திமுக நகர துணை செயலாளர் K.தென்னரசு, சித்ரா தென்னரசுMc வழங்கினார். அப்போது பி.எல் 2 எஸ்.சந்திரன், ஐ.டி விங் அஜய் குமார், பி.எல்.சி ராகுல், அவைத் தலைவர் ஸ்டாலின், பொருளாளர் எம்.சுந்தர் மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.*




## தி.மு.க. அரசின் அதிகார துஷ்பிரயோகம் எல்லை மீறி சென்று விட்டது; ஆர்.பி.உதயகுமார்



**மதுரை, ஜன.17:** மதுரையில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது,

எடப்பாடி பழனிசாமி சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று நிச்சயம் கோட்டைக்கு போவார் அப்போது தமிழக மக்களுக்கு நிச்சயமாக வழி பிறக்கும்.

அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய ஜல்லிக்கட்டு போட்டி மன்னராட்சி முதல் தற்போது மக்களாட்சி வரை மக்கள் ஜல்லிக்கட்டாக நடைபெற்று வருகிறது. ஆனால் தற்போது உதயநிதிக்காக ஜல்லிக்கட்டா? மு.க.ஸ்டாலினுக்காக ஜல்லிக்கட்டா? என்ற கேள்வி எழுந்துள்ளது. பாலமேடு ஜல்லிக்கட்டு மரபுபடி 7 மணி முதல் 8 மணிக்குள் தொடங்கப்பட வேண்டும். ஆனால் 9.30 மணி தாண்டியும் வாடிவாசல் திறக்கப்படவில்லை என்பது மக்களுக்கு வேதனையாக இருந்தது

உதயநிதிக்காக வேடிக்கை ஜல்லிக்கட்டு போட்டியை நடத்துகிறார்கள். தி.மு.க. அரசின் அதிகார துஷ்பிரயோகம் எல்லை மீறி சென்று விட்டது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஜனநாயகம் மலர இந்த தைத்திருநாளில் நாம் சூளுரை ஏற்க வேண்டும் என்று கூறினார்.

## சைக்கிள் சின்னத்தில் போட்டியிட விருப்பம்: அ.தி.மு.க. கூட்டணியில் 12 தொகுதிகளை எதிர்பார்க்கும் த.மா.கா.



**சென்னை, ஜன.17:** கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த த.மா.கா. 6 தொகுதிகளில் போட்டியிட்டது. ஒரு மேல்-சபை இடமும் வழங்கப்பட்டது. ஆனால், போட்டியிட்ட 6 இடங்களிலும் தோல்வியை தழுவியது. கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் மட்டும் எம். பி. ஆனார்.

அப்போது, த.மா.கா. வேட்பாளர்கள் அனைவரும் அ.தி.மு.க. சின்னமான இரட்டை இலையில் போட்டியிட்டனர். இந்த நிலையில், த.மா.கா.வின் சின்னமான சைக்கிளில் போட்டியிட வேண்டும் என்றால் குறைந்தது 12 தொகுதிகள் தேவை. எனவே, இந்த முறை அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் 12 தொகுதிகளை த.மா.கா. எதிர்பார்க்கிறது.

சமீபத்தில் சேலத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்த ஜி.கே.வாசன், இதே கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனால், எடப்பாடி பழனிசாமி மறுத்துவிட்டதாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், மும்பை மாநகராட்சி தேர்தலில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான ரவி ராஜாவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய அங்கு சென்ற ஜி.கே.வாசன், தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஸ் கோயலை சந்தித்து பேசினார்.

அப்போது, தமிழக அரசியலில் விஜய் வருகை குறித்து பேசப்பட்டதாக தெரிகிறது. மேலும், த.மா.கா.வுக்கு 12 தொகுதிகள் வேண்டும் என்பதையும் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார். பியூஸ் கோயலும் தமிழகம் வரும்போது அதுகுறித்து பேசலாம் என்று கூறிவிட்டதாக சொல்லப்படுகிறது.

## தவெகவில் இணைந்த அதிமுக முன்னாள் வேலூர் மாவட்ட செயலாளர் வாசு



**வேலூர், ஜன.17:** வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகர் முனிசிபல் காலனியை சேர்ந்தவர் எல்.கே.எம்.பி.வாசு. அ.தி.மு.க. முன்னாள் வேலூர் மாவட்ட செயலாளர். இவர் 1991-ம் ஆண்டு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட அ.தி.மு.க. மாணவர் அணி செயலாளராகவும், 96-ம் ஆண்டு வேலூர் நகரசபை அ.தி.மு.க. குழு தலைவராகவும் பணியாற்றியவர்.

2006-ம் ஆண்டு முதல் 2010-ம் ஆண்டு வரை வேலூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக பணியாற்றினார். அப்போது கிழக்கு மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, கே.வி.குப்பம், குடியாத்தம், அணைக்கட்டு, ராணிப்பேட்டை, ஆற்காடு, சோளிங்கர், அரக்கோணம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் இருந்தன. 2009-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வேலூர் தொகுதியில் அ.தி.மு.க வேட்பாளராக போட்டியிட்டார். 2017-ம் ஆண்டு அகில உலக எம்.ஜி.ஆர் மன்ற துணைச் செயலாளராக இருந்தார்.

இந்த நிலையில், எல்.கே.எம்.பி.வாசு சென்னையில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முன்னிலையில் த.வெ.க.வில் இணைந்தார். அப்போது எல்.கே.எம்.பி.வாசு, விஜய்க்கு எம்.ஜி.ஆர். புத்தகத்தை நினைவு பரிசாக வழங்கினார். நிகழ்ச்சியின் போது முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தமிழக வெற்றிக் கழக வேலூர் மாவட்ட செயலாளர் வேல்முருகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com